விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 04 செவ்வாய்க்கிழமை (17.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 029

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## பேக்கரி உற்பத்திகளின் விலை அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

பேக்கரி உற்பத்தி பொருட்களின விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி உற்பத்தி பொருட்களுக்கான மூலப்பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.

24ஆம் பக்கம் பார்க்க....

## லசந்த கொலை நீதிமன்றில் அறிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரம துங்கவின் கொலை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கலகிஸை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

கல்கிஸை நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

23ஆம் பக்கம் பார்க்க....

# நீங்கள் ஆக்கபூர்வமாக எதுவும் செய்யவில்லை!



## வடக்கு மாகாணசபை மீது அமைச்சர் நிமால் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்குமாறு வலியுறுத்தி வருகின்ற போதும்.ஏற்கெனவே மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களைக் கொண்டு இன்னும் ஆக்க பூர்வமாக எந்த பணிகளையும் வடக்கு சபை முன்னெடுக்கவில்லை என போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

(04-ம் பக்கம்...)

## காணாமல்போன கணவன், மனைவி!

### கட்டுண்டு மயங்கிய நிலையில் கணவர் மட்டும் நேற்று மீட்பு

(மல்லாவி)

மர்மமான முறையில் கணவன், மனைவி ஆகிய இருவர் காணாமல போகச் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் கணவர் மட்டும் கை, கால்கள் கட்டப்பட்டு, வாயில் பிளஸ்டர் ஒட்டப்பட்ட நிலையில் ஓமந்தைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## விரைவில் பிரதமர் ரணிலை சிறைக்குள் அனுப்புவோம்!

### கூட்டு எதிரணி சூளுரை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை காற்சட்டை அணிவித்து, சிறைக்கு அனுப்பிவைக்கும் நாள் வெகுதொலைவில் இல்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி சூளுரைத்துள்ளது.

தமது கட்சியின் தலைவரை (விமல் வீரவன்ச) விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், நல்லாட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் களையெடுப்பு நடவடிக்கைக்கு எதிராகவும் நாடாளுமன்ற

23ஆம் பக்கம் பார்க்க....

## இளைஞனை கடத்திய படை அதிகாரி கைது

(கொழும்பு)

கொழும்பில் கப்பம்கோரி தமிழ் இளைஞன் ஒருவரைக் கடத்தி காணாமற்போகச் செய்தவர் என்ற குற்றச்சாட்டில், கடற்படை உயர் அதிகாரி ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் 2008ஆம் ஆண்டு கடத்தப்பட்டு

23ஆம் பக்கம் பார்க்க....

## விமலின் சகாவிடம் நேற்று விசாரணை

(கொழும்பு)

கூட்டு எதிர்கட்சியின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## ஒன்றரை இலட்சம் பேர் வரட்சியால் பாதிப்பு!

### அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் நிலவும் கடும் வரட்சியால் 11 மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 598 பேர் இதுவரையிலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

திருகோணமலை, கண்டி, கம்பஹா, அம்பாந்தோட்டை, மொனராகலை, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம்,பொலநறுவை, குருநாகல்,

23ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்பு - மு.காங்கிரஸ் இணைந்து அதிகார பகிர்வினை பெறவேண்டும்

### கிழக்கு முதலமைச்சர் வலியுறுத்து

(மட்டக்களப்பு)



தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு அரசாங்கத்திற்கு பல்வேறு வழிகளில் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்த கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட்,

23ஆம் பக்கம் பார்க்க....

## பொருத்து வீட்டுத்திட்டம் தமிழ் மக்களுக்கு சாபம்!

### எதிர்ப்பை வெளியிட்டார் அங்கஜன் எம்.பி

(யாழ்ப்பாணம்)



பொருத்துவீட்டுத்திட்டம் தமிழ் மக்களுக்கு சாபம் என சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## வரட்சி நிவாரணப் பணிகளுக்கு உதவிட ஐ.நா சபை நிறுவனங்களுக்கு அழைப்பு

### ஜனாதிபதி செயலகத்தில் நேற்று கலந்துரையாடல்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடுமையான வரட்சி நிலை குறித்து தீவிர கவனம் செலுத்தியுள்ள ஐக்கிய நாடுகள் சபையும் அதன் துணை நிறுவனங்களும் வரட்சி நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஜனாதிபதி செயலணிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உறுதியளித்துள்ளன.

ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர், ஐ.நா அபிவிருத்தித் திட்ட வதிவிட பிரதிநிதி, உலக உணவுத் திட்ட பிரதிநிதியும் இலங்கைக்கான பணிப்பாளருமான பிரண்டா பார்ட்டன் மற்றும் ஐ.நா உலக உணவுத் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏர்தரின் கசின் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடலில் வீழ்ந்த இளைஞன் மீட்பு

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் காற்று வாங்கிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவர் கடலில் தவறிவிழுந்த நிலையில் காப்பாற்றப் பட்டுள்ளார்.

நேற்று மாலை துறைமுகப் படிக்கட்டில் காற்று வாங்கிக் கொண்டிருந்த துன்னாலை வடக்கு வல்லியானந்தம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே தவறி கடலுக்குள் வீழ்ந் துள்ளார்.

இதனை அவதானித்த அப்பகுதியில் நின்ற பொது மக்களும் படைமுகாமில் நின்ற இராணுவத்தினரும் அருகில் இருந்த படகின் உதவியுடன் வீழ்ந்த இளைஞனைக் காப் பாற்றினர்.

தெய்வாதீனமாக அவ் இளைஞனுக்கு எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என அப்பகுதியில் நின்றவர்கள் தகவல் வெளி யிட்டனர். (செ-60)

# பிற மதங்களை மதிப்பதன் மூலமே நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட முடியும்

## யாழ்.அரச அதிபர் சுட்டிக்காட்டு

பிற மதங்களை மதிப்பதன் மூலமே நல்லி ணக்கம் கட்டியெழுப்பப்பட முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என். வேத நாயகம் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க வாரத்தை முன் னிட்டு நாடளாவிய ரீதியில் பாடசாலை மட்டத் தில் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக கும் நிகழ்வு நேற்றைய தினம் 11.30 மணி யளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி யில் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பல்லின மொழி, மற்றும் மதம் கொண்ட எமது நாட் டில் இனங்களுக்கிடையே புரிந்துணர்வு என் பது அவசியமாகின்றது. இந்த ஒற்றுமை இருந தாலே பல இனங்கள் வாழும் இந்த நாட்டில் ஒற்றுமையும் சமாதானமும் ஏற்படும்.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமையும் சமாதானமும் காணப்பட்டால்தான் நாட்டின் அபிவிருத்தியும் கட்டியெழுப்பப்படும். இதன மூலமே நாடும் தன்னிறைவான பொருளா தாரத்தை அடைந்து கொள்ள முடியும். இவை அனைத்தும் நடைபெற வேண்டுமானால் ஒவ்வொரு இனத்தை சேர்ந்த மக்களும் சக இனத்தவர்களின் மதங்களை, மொழியை பண்பாட்டை மதிப்பதற்கு பழகிக் கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையில் இருந்து இங்கு வரு பவர்கள் பயத்துடனேயே வருவதாக கூறு கின்றார்கள். ஆனால் இங்கு வந்த பின்னர் எல்லாவற்றையும் மறந்து சகஜமாக பழகு கின்றார்கள். இங்கிருந்து செல்லும் போது எமது மக்களை பிரிந்து செல்வதாக கூறி வருத்தம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறே நல்லிணக்கம் என்பது ஏற்பட முடியும். ஒரு இனத்தை சேர்ந்தவர்கள் மற் றைய இனத்தை சேர்ந்த மக்களுடன் ஒற்று மையாக பழகும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதனை எமது ஜனாதிபதி தலைமை யிலான நல்லிணக்க அமைச்சு தற்போது முன்னெடுத்து வருகின்றமை வரவேற்கத் தக்கதாகும்.

இந்த செயற்பாடு குறிப்பிட்ட காலத்துக்குள் மட்டுப்படுத்தப்படாது தொடர்ந்தும் முன் னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு முன் னெடுக்கப்பட்டால்தான் இனங்களிடையே காணப்படுகின்ற அச்ச உணர்வுகள் இல்லா தொழிக்க முடியும்.

நாம் அனைவரும் இலங்கையர் என்ற எண்ணம் எப்போது கட்டியெழுப்படுகின் றதோ, அப்போதே நாட்டன் எதிர்காலத்தை சிறந்தமுறையில் கொண்டு செல்ல முடியும்.

இதனை நாட்டின் ஒவ்வொரு பிரஜை களுக்கும் புரிய வைக்க வேண்டிய பொறுப்பு நல்லிணக்க அமைச்சுக்கும் எமக்கு உண்டு. அதனை மாணவர் பருவத்திலிருந்து முன் னெடுப்பதற்காகவே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது என அவர் தெரி வித்தார். (செ-4)

# பொலிகண்டி இந்துவின் வைர விழா இன்று

பொலிகண்டிஇந்து தமிழ்க் கலவன் பாட சாலையின் வைர விழா இன்று செவ் வாய்க்கிழமை முற் பகல் 9 மணிக்கு பாட சாலையின் பாலாவி அரங்கில் அதிபர் வீ. இந்திரலிங்கம் தலை மையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதய குமார், சிறப்பு விரு ந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங் கம், கிழக்கு பல் கலைக் கழக பேரா சிரியர் அம்மன்கிளி முருகதாஸ், பருத்தித் துறை பிரதேச செய லர் இ.த. ஜெயசீலன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (செ-60)

# UNIVERSITY OF JAFFNA

## INVITATION FOR BIDS

**Balance Work on the Construction of Lecture Hall Complex for the Faculty of Management Studies and Commerce - Block A (Stage I), University of Jaffna**

1. **The Chairperson, Department Procurement Committee (DPC), University of Jaffna** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for **"Balance Work on the Construction of Lecture Hall Complex for the Faculty of Management Studies and Commerce – Block A(Stage I), University of Jaffna"** as described below and estimated to cost of **Rs. 78.0 million(excluding VAT).**

   The construction period is **365 Days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C4** or above with the Construction Industry Development Authority (CIDA),valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, (Capital Works & Planning) University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**
   Contact numbers are: Phone. Tel: 021-2219201, Fax: 021-2219201

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar (Capital Works & Planning) University of Jaffna, from **18th January 2017** until **08th February 2017** from **9:00hrs to 15:00hrs** working days upon payment of non refundable fee of Rupees Fifteen Thousand **(Rs. 15,000/-).**

6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the in the tender box kept in the Registrar's office to reach on or before 14:00 hrs on the 09th February 2017.** Bids will be opened soon after closing at **14.00 hrs on the 09th February 2017** at the same venue in the presence of the bidders representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of **Vice Chancellor-University of Jaffna.**
   - For an amount of **Rs.1,200,000.00**
   - Valid up to 119 days **(up to 07th June, 2017)** from the closing date of Bid.
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at 10:00 hrs on **27th January 2017** at the Board Room of the University of Jaffna, Thirunelvely, Jaffna.

**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
Thirunelvely, Jaffna
16.01.2017

(C-7265)

# கண்ணீர் அஞ்சலி

இளைஞர் தலைமைத்துவ
அபிவிருத்தி பயிற்சி கற்கைநெறி
நண்பி இராசேந்திரம் இந்துமதி
அவர்களின் சகோதரன்



**இராசேந்திரம் மதிவதனன் (மதி)**

(செம்பியன்பற்று தெற்கு,
செம்பியன்பற்று)

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிக்கின்றோம்.

இளைஞர் தலைமைத்துவ
அபிவிருத்தி பயிற்சி கற்கைநெறி
நண்பர்கள்

(7272)

# பேரவைச் செயலகம், வடக்கு மாகாண சபை

**மதிய உணவு (Lunch) கனிம நீர் (Mineral Water) காகிதாதிகள் (Stationery Items) சுத்திகரிப்புப் பொருட்கள் (Sanitary Items) மற்றும் பிரதியெடுக்கும் மை (Toners) விநியோகத்துக்கான கேள்வி கோரல் - 2017**

01 வடக்கு மாகாண பேரவைச் செயலக பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான மற்றும் தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றார்.

02 தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் 17.01.2017 தொடக்கம் 07.02.2017 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையான அலுவலக நேரங்களில் கீழ்க் காட்டப்பட்ட முகவரியில் (021-205 7081), பேரவைச் செயலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

03. விலைக்கேள்விகள் 07.02.2017ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இச்செயலகத்தில் பேணப்படும். பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்விகள் அனைத்தும் 08.02.2017ஆம் திகதி பி.ப 2.30 மணிக்குத் திறக்கப்படும்.

04 'மதிய உணவு விநியோகம் - 2017' ' கனிம நீர் விநியோகம் - 2017' 'காகி தாதிகள்,. சுத்திகரிப்புப் பொருட்கள் விநியோகம் - 2017' 'பிரதியெடுக்கும் மை விநியோகம் - 2017' என்ற விபரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப் பிடாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

05 எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக் கப்படுவர்.

06 கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**க. தெய்வேந்திரம்**
**தலைவர், பேரவைச் செயலக பெறுகைகள் குழு,**
**வடக்கு மாகாண சபை, A-9 வீதி,**
**கைதடி.**

(C-7266)

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

## சம்பந்தனை கடுமையாக விமர்சித்து ரத்ன தேரர் கருத்து

**(கொழும்பு) ஆயுதப் போராட்டம் இப்போது மௌனித்துவிட்டது. எனவே உரிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் எனச் சுட்டிக் காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர், முழு நாட்டுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் என்பதை இரா.சம்பந்தன் மறந்து விட்டார். அவர் வடக்கு- கிழக்கிற்கு மட்டுமே எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டு வருவதாகவும் கடுமையாக விமர்சித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆயுதப் போராட்ட காலத்தில் பிரபாகரனுக்கு மட்டுமே சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடிந்தது. அதனையும் தாண்டி புலி உறுப்பினர்கள் மட்டுமே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

அப்போது விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் மட்டுமே நேர்வே உட்பட இலங்கையுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

ஆனால் இப்போது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு விட்டது. முறையான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

மேலும் முழு நாட்டுக்கும் எதிர்க்கட்சி தலைவர் என்பதை இரா.சம்பந்தன் மறந்து விட்டார். அவர் வடக்கு,கிழக்கிற்கு மட்டுமே எதிர்க்கட்சி தலைவராக செயற்பட்டு வருகின்றார்.

தமிழ் மக்களுடன் முறையான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு அவர்களுடைய காணிகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும். ஆனால் அவை செய்யப்படவில்லை.

ஆரம்பகாலங்களில் பிரபாகரனையும் புலிகளையும் அழிக்க முடியாது. ஆயுத பலத்தில் சிறப்பாக விடுதலைப் புலிகள் செயற்பட்டு வந்தனர்.

அதனால் பிரபாகரனுக்கு பணம் கொடுத்து அல்லது சமாதானம் பேசி வடக்கு, கிழக்கினை பிரித்து கொடுத்து விடும் வகையில் ஆட்சியாளர்கள் செயற்பட்டு வந்தனா.

ஆனால் அந்த நிலை மாற்றமடைந்தது. இப்போது தீவிரவாதம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. இருந்த போதும் சர்வதேசத்திற்கு ஏற்ற வகையில் நடந்து வருகின்றார்கள்.

குறிப்பாக யுத்தக் குற்றம் இடம்பெற்றது என்ற வகையில் இராணுவத்தினரை தண்டிக்கப்பார்க்கின்றார்கள். அவற்றை விடுத்து விட்டு நாட்டைக் கட்டியெழுப்ப செயற் பட வேண்டும் எனவும் அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவத்தமை குறிப்பிடத்தக்கது.(இ-3)

## சம்பந்தனின் பதவி எமக்கு வேண்டும்

### கூட்டு எதிர்க்கட்சி மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் அனைத்து எதிர்க்கட்சி பதவிகளும் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா ஆகிய பதவிகள் கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 51 உறுப்பினர்களுடன் பெரும்பான்மையை கொண்டுள்ள கூட்டு எதிர்க்கட்சிக்கு குறித்த இரண்டு பதவிகளும் வழங்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜே.வி.பிக்கு 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு மொத்தமாக 22 உறுப்பினர்கள் மாத்திரமே ஆதரவு வழங்குவதாகவும் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் அவர்களை விட இரண்டு மடங்கிற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது தரப்பு கொண்டுள்ளதாக அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

எதர்க்கட்சியை தலைமை தாங்குவதற்கு தாம் விரும்புவோரை நியமித்து, தமது செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக தினேஷ் குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சி அமைப்பாளர்களையும் தாம் விரும்பியவாறு அரசாங்கம் நியமித்துள்ளதாக அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் பெரும்பான்மை உறுப்பினர்களை கொண்டவர்களே எதிர்க்கட்சி தலைவர்களாக நியமிக்கப்படுவதாக குறிப்பிட்ட தினேஷ் குணவர்த்தன, இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக நியமித்தமைக்கான காரணத்தை அரசாங்கம் வெளியிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (இ-3)

## மகிந்தவை சந்திக்கும் மாகாண முதல்வர்கள்

மாகாண சபை முதலமைச்சர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்க தீர்மானித்துள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் முதலமைச்சர்கள் இவ்வாறு மகிந்தவை சந்திக்கத் தீர்மானித்துள்ளதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்ததன்கிழமைமாகாண முதலமைச்சர்கள் கூடி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இதன்போது மகிந்தவை சந்திக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனைக்கு மாகாண முதலமைச்சர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திப்பு நடத்த மகிந்தவிடம் திகதி ஒன்றை ஒதுக்கிக் கொண்டு, இணைப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு சபரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை முதலமைச்சர்கள் சந்திக்க விரும்புவதாக தெரிவிக்கும் செய்தி மகிந்தவை சென்றடைந்துள்ளது. இந்த சந்திப்பினை நடத்த மகிந்தவும் இணக்கம் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து முதலமைச்சர்கள் மகிந்தவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்த சந்திப்பு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் அறிவிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த சந்திப்பு தொடர்பில் மாகாண முதலமைச்சர்கள் எவரும் இது வரையில் பகிரங்கமாக உறுதிப்படுத்தவில்லை. (இ-3)

## அமைச்சரவை பத்திர விவகாரம்

## ஜனாதிபதியால் பிரதமருக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சரவைக்கு பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது, குறித்த அபிவிருத்தி சார்ந்துள்ள அமைச்சின் ஊடாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளதாக அறிய முடிகிறது.

அண்மைக்காலமாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர்கள் இருக்கும் போது, அவ்வமைச்சு சார்ந்த அபிவிருத்தி திட்டங்களை பிரதமரும் அவரின் கீழ் இருந்த பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான அமைச்சரவை உப குழுவும் அமைச்சரவைக்கு சமர்ப்பித்ததால் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியே ஜனாதிபதி பிரதமருக்கு இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாக அரசாங்கத்தின் உள்ளக தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் குறித்த அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளதாகவும் அதனை மையப்படுத்தியே ஜனாதிபதி பிரதமருக்கு இதனை அறிவித்துள்ளதாகவும் அதன்படி எதிர்வரும் நாட்களில் வழமையான அணுகுமுறை பின்பற்றப்பட்டு அந்தந்த விடய அமைச்சர்கள் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிப்பர் எனவும் அந்த தகவல்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (இ-3)

## அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம்; மேலும் மூவர் பொலிஸாரால் கைது

அண்மையில், அம்பாந்தோட்டை பகுதியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மூவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரில் ஒருவர் வீரக்கெட்டிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய இருவர் அம்பலாந்தோட்டை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட காணொலியை வைத்துக் கொண்டே குறித்த மூவரையும் பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர். (இ-3)

### ஜி.எஸ்.பி.பிளஸ் ஐ பெற

## நிபந்தனை இல்லை; ரவி மீண்டும் மறுப்பு

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை பெற்றுக் கொள்வதற்கு நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படவில்லை என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மீண்டும் மறுத்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை பெற்றுக் கொளவதற்காக அரசாங்கம் எவ்வித நிபந்தனைகளுக்கும் இணங்கவில்லை.

இதற்கு முன்னதாக எவ்வாறு இலங்கைக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டதோ அதேவிதமாகவே வரிச்சலுகை வழங்கப்படுகின்றது.

சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கி வரும் நலன் திட்டங்களை தாங்கிக்கொள்ள முடியாத தரப்பினர் காழ்ப்புணர்ச்சியினால் பொய்ப் பிரசாரம் செய்கின்றனர்.

நிபந்தனைகள் எதுவுமின்றி கடன் அல்லது வட்டி என்பனவும் இன்றி நாட்டுக்கு இந்த வரிச் சலுகைத் திட்டத்தின் ஊடாக 300 மில்லியன் டொலர் கிடைக்கும்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத் தில் வரிச் சலுகைத் திட்டம் கிடைக்காத போது குரல் கொடுக்காதவர்கள், வரிச் சலுகைத் திட்டம் கிடைக்கும் போது கூடுதலாக பேசுகின்ற னர் என அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# தமிழர் ஆசிரியர் சங்கம் மீது பழிசுமத்துவதை அனுமதியோம்

வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் தமிழர் செறிந்து வாழும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் உள்ள தமிழ்பேசும் குழந்தைகளின் கல்வியில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மிகுந்த கரிசனையுடன் தொழிற்படுகின்றது. இதற்கு அப்பிரதேசங்களில் உள்ள தமிழ் அரசியல் தலைவர்களும் பூரண ஆதரவை வழங்கிவருகின்றனர். ஆனால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு களங்கத்தை ஏற்படுத்தி எமது மொழிசார்ந்த குழந்தைகளின் எதிர்காலக் கல்வியை அழிப்பதற்கு ஆசிரிய தொழிற்சங்கம் என்ற போர்வையுடன் சிலர் முயற்சிப்பதனை நாம் ஒருபோதும் அனுமதிக்கவும் மாட்டோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைய காலங்களில் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் புதிதாக நியமனம் கிடைக்கப்பெற்ற அதிபர்களையும் கடமை நிறைவேற்று அதிபர்களையும் பகைவர்களாக்கி பலநூறு பாடசாலைகளில் அதிபர்களை வெளியேற்றி அதிபரில்லாத பாடசாலைகளாக மாணவர்களை மீண்டும் அநாதைகளாக்க சிலர் எடுக்கும் முயற்சிகளையும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஆசிரியர்களையும் வன்னி பெருநிலப்பரப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களையும் பகைவர்களாக்கி இரண்டு பிரதேசங்களிலும் பிள்ளைகளின் கல்வியைச் சீரழிக்க எடுக்கும் திட்டமிட்ட சூழ்ச்சிகளையும் எம்மின மக்களுக்கும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் தெளிவுபடுத்து முகமாக இந்த அறிக்கையை நாம் விடுகின்றோம்.

## புதிய அதிபர்களின் நியமனம்

மத்திய கல்வி அமைச்சு புதிதாக நியமனம் கிடைக்கப்பெற்ற அதிபர்களுக்கு நியமனங்களை வழங்க எத்தனித்தபோது மத்திய அரசாங்கத்தில் நெருக்கடிகள் தோன்றின. அத்தகைய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அந்தந்த மாகாணங்களுக்கு நியமன அதிகாரங்களை வழங்கி புதிய அதிபர்களின் தகுதிநிலைப் பட்டியலையும் வழங்கியது. இதன் பின்னர் நியமனம் தொடர்பான சகல அதிகாரங்களும் மாகாணத்தின் கைகளில் வந்தது. ஆனால் அதனை வடக்கு மாகாணம் சரியாகப் பயன்படுத்தாமலும், சரியான நியமனப் பொறிமுறைகளைக் கையாளாமலும் விட்ட தவறை சிலர் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்மீது பழிசுமத்தப் பார்க்கின்றனர். இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது.

உதாரணமாக, வன்னிப்பெருநிலப்பரப்பில் பெருமளவான அதிபர் வெற்றிடங்கள் உள்ளன. அங்கு நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கடமையேற்கவில்லை. காரணம் அவர்கள் ஏற்கெனவே வெளிமாவட்ட சேவை முடித்தவர்களாகவும், கஷ்டப்பிரதேச சேவை முடித்தவர்களாகவும் உள்ளனர். துணுக்காய் கல்வி வலயத்தில் பதினெட்டுப் பாடசாலைகளுக்கு அதிபர்கள் இல்லை. அங்கு நியமிக்கப்படவர்கள் எவரும் வெளியிடங்களில் இருந்து செல்லவில்லை. அங்குள்ள சில பாடசாலைகள் அதிபர்களே இல்லாமல் இயங்குகின்றன. கிளிநொச்சி கல்வி வலயத்தில் நாற்பது வெற்றிடங்கள் கண்டறியப்பட்டன. அவற்றில் பதினைந்திற்கு மட்டுமே புதிய அதிபர்கள் சென்றனர். இந்த நிலையில் பாடசாலைகள் அதிபர்கள் இல்லாமல் இயங்குவதும், கடமைப் பொறுப்பில் இருப்பவர்கள் விட்டுச் செல்கின்ற நெருக்கடியான நிலையும் அங்கு உருவாகியுள்ளது. இத்தகைய நிலையை உருவாக்கி கல்வியை அழிப்பதே திட்டமிட்டவர்களின் நோக்கம் எனபதனை சகலரும் அறிந்து கொள்ள வேண்டும்.

இதைவிட சில ஊடங்களுக்கு தவறான தகவல்களைக் கொடுத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தை அத்தகைய ஊடகங்களோடு பகைமூட்டவும் முற்படுகின்றனர். அத்தகைய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வைத்து ஊடகங்களை தொழிற்சங்க பகைமை என்ற வாசகங்களைப் பாவிக்கச் செய்கின்றனர். நாம் எந்தத் தொழிற்சங்கத்திற்கும் பகைவர்கள் இல்லை. காரணம் தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் போட்டிக்கு எவரையும் கொண்டிருக்கவில்லை.

ஆனால், தங்களையும் எமது பிரதேசங்களில் வெளிக்காட்ட வேண்டும் என்பதற்காக இத்தகைய பொய்யுரைகளை பரப்புவதும், அதனை சில ஊடகங்களுக்குக் கொடுத்து பிரசுரிக்க வைப்பதும் அநாகரிமான செயல் என்றே நாம் கருதுகின்றோம். இவர்களுக்கு உந்து சக்தியாக சில பேரினவாதிகள் உள்ளமையும் எம்மால் கண்டறியப்பட்டுள் ளது.

ஏட்டிக்குப் போட்டியாக வடபுலத்தில் என்ன நடக்கின்றது என்பதனை கல்வி அறிவுள்ள வடபுலத்து மக்கள் நன்கு அறிவர். ஆனால் அதற்காக எம்மீது பழிசுமத்துவதை நாம் ஏற்கமுடியாது.

ஆகையால் வடமாகாணத்தில் உள்ள கல்விப்புலம் சார்ந்த தெளிந்த அறிவுள்ள அனைவரும் மிகுந்த அவதானத்தோடு எதிர்வரும் காலங்களில் இருக்க வேண்டும் என்றும், தகுந்த தருணத்தில் கல்விப்புலம் சார்ந்த சகல விடயங்களையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளிப்படுத்தும் எனவும் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீங்கள் ஆக்கபூ ...

வவுனியா மத்திய பேருந்து நிலைய கட்டிடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வட மாகாணசபையில் நான் குறைபாட்டை காண்கின்றேன். நீங்கள் (வடக்கு முதலமைச்சர்) அதிகமாக அதிகாரம் வேண்டும் என கேட்கின்றீர்கள். அது நியாயமானதுதான். ஆனால் உங்களுக்கு வழங்கிய அதிகாரங்களை கூட நீங்கள் சரியான நேரத்தில் ஆக்கபூர்வமாக பயன்படுத்தியதாக நான் அறியவில்லை.

எமது ஜனாதிபதி தலைமையில் இராணுவத்திடம் இருந்து பல காணிகள் விடுவித்து தரப்பட்டுள்ளது. ஆனால் அந்த விடுவிக்கப்பட்ட காணிகளில் ஏதாவது பயன்படக் கூடிய வகையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?.

இரண்டு மில்லியன் ரூபா ஒரு வீட்டுக்கு என ஒன்றரை வருடங்களாக அரசாங்கம் பணத்தை ஒதுக்கி தந்துள்ளது. வீடுகளை கட்டினீர்களா?

இது எங்களுக்கு பாரிய பிரச்சினை.

பால் போத்தலை கேட்கின்றனர். பால் கொடுக்கின்றோம். ஆனால் அவர்கள் பாலை குடிக்கின்றார்கள் இல்லை.

மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் சிறுபான்மை இனத்திற்கான உரிமையை பெற்றுக்கொடுக்கவேண்டும் என செயற்படும் அரசாங்கம். ஆகவே அந்த அரசாங்கத்திடம் இருந்து நீங்கள் பிரயோசனங்களை பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய பகுதியில் உள்ள பிரச்சினையை நீங்களே தீர்த்துக்கொள்ளுங்கள்.

அனைத்து மாகாணங்களிலும் கூட மாகாணங்களுக்கிடையிலான செயற்றிட்டங்களை கொண்டு வந்து செயற்படுத்துகின்றனர். ஊவா மாகாணத்தில் கூட அது தர்மதமாகி அண்மையில் செயற்படுத்தியிருந்தனர். இவை மாகாண ரீதியில் செய்யப்படவேண்டிய விடயங்கள்.

வட மாகாணசபைக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே வட மாகாணசபைக்கு பாரிய பொறுப்புள்ளது. இந்த மக்களுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் செய்ய வேண்டும். அதற்கான நிதியை ஒதுக்கி கொடுக்கவேண்டும். அதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்றார். (செ - 250)

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன்

*பழைய மல்லாவியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட* ***கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன்*** *அவர்கள் 16/01/2017 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலம்சென்ற கணபதிப்பிள்ளை செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் அமரர் முத்தையா இளையபிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் ரவிச்சந்திரன் (சுவிஸ்) அவர்களின் பாசமிகு தந்தையும் தர்சினியின் அன்பு மாமனும் தர்மிகா, ரவிக்கா, சீனு ஆகியோரின் பேரனும் அமரர் இராமலிங்கம், அமரர் வேலுப்பிள்ளை, அமரர் மகேஸ்வரி, காசிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், சரஸ்வதி, சிதம்பரம், அமரர் இரத்தினம் பொன்னம்மா, ரூபசிங்கம், விசயரத்தினம், பாலச்சந்திரன், ஜெயச்சந்திரன், பரமேஸ்வரி, சாவித்திரி, சரஸ்வதி, விமலாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.*

*இறுதிக்கிரியை நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அணிச்சியன்குளம் இந்து ம்யானத்தில் நடைபெறும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.*

**தொ.இல - 0777632223**
**004161601 5376 (சுவிஸ்)**

**தகவல்**
**குடும்பத்தினர்**

(C - 7270)

# பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல்

கல்பிட்டி பத்தலங்குண்டுவ தீவு பகுதியில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பத்தலங்குண்டுவ தீவு பகுதியில் உள்ள பெண் ஒருவர் பதிவு செய்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளச் சென்ற போதே பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தின் போது அடாவடித் தனமாக நடந்து கொண்ட முறைப்பாடு செய்த பெண்ணின் மகனே, பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கடற்படையினரால் கல்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் மேற்கொண்ட சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

**வீடு வாடகைக்கு தேவை**

மல்லாகத்திற்கும் மருதனார்மடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:- 071 190 3361
076 382 2266

(7537)

**வைத்தியம்**

உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல், தலைமுடி உதிர்தல், ஆண்மை குறைபாடு, குழந்தையின்மை போன்ற சகலவிதமான நோய்களுக்கும் பக்கவிளைவற்ற சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு-சன்ஸ் ஹெல்த் கெயர்,
255, K.K.S. வீதி, கொக்குவில்.
T.P-077 035 7307 (7439)

**மனதில் சுமையா?**

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?
உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117
(தினமும் காலை 9.00 - 1.00)
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

# 17.01.2017 நூறாவது பிறந்த தினமும் 15 ஆவது சிரார்த்ததினமும்

*எங்கள் தந்தையார்!*

சீர் பொலிந்த தீவகத்தில் சிவம் பூத்த சரவணையில்
பேர்போன வைத்தியநாதன் புத்திரனாம் கந்தசாமி
நல்ல தொழிலாளி, நல்லதோர் தமிழ் அறிஞன்.
சிந்தையில் நற்பண்பு டைய சிறந்த பெரியோன்.
கைத்தொழில் செய்தெங்களைக் கருத்தாக வாழவைத்தார்.
அம்மாவையும் எங்களையும் அன்பால் அரவணைத்தார்.
கண்டிப்பும் அன்புமாய்க் கனிவாய் வளர்த்தெடுத்தார்.
கல்வி கற்க வைத்தெம்மைக் கண்ணியமாய் வாழ வைத்தார்.
நற்தந்தையாய் அவயத்தில் முந்தி இருக்க வைத்தார்.
பண்பான தந்தையாய்ப் பாசத்துக்கோர் இலக்கணமாய்
எங்களை வாழ வைத்த இனிய தெய்வம் எங்கள் அப்பு.
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த மனித தெய்வம் எங்கள் அப்பு.
எட்டு வகுப்புத்தான் படித்தாலும் இனிய கவிதைகளை
விந்தையாய்ப்பாடி வியக்க வைத்த கவிஞர் அவர்.
நாமகள் கருணை பெற்ற நற்கவிஞர் எங்கள் அப்பு.
அறிவுரை, அரசியல், சந்தக்கவி, நெடுங்கவி, பக்திப்பாடல்
பனுவல் பல, திருப்புகழ், நீதிப்புகழ், சிறந்த தெம்மாங்கு
வகை வாழ்க்கைச் சரிதத்தையும் வளமாய் இயம்பி வைத்தார்.



**17.01.1917 தீவகம் சரவணை மேற்கில் அவதரித்த எங்கள் தந்தையார் உயர்திரு. வைத்தியாநாதர் கந்தசாமி அவர்களின் ஞாபகார்த்தம்**

எல்லாரும் ஏற்கும் இனிய கவிதைகளைச் சொல்லால் வடித்து வைத்த வல்லாளர். எல்லாம் கவி, எதிலும் கவி, எங்களப்பன்
ஆசுகவி அருட்கவி அஞ்சாமல் பாடும் கவி, கவிகாள மேகம் கால்தூசி பட்ட கவி எக்காளமாக எதையுமே பாடும் கவி
முக்காலும் ஏற்கும் முதிர்ந்தகவி சாக்கால மட்டும் சரி பிழையைச் சொன்ன கவி செத்து மறைந்தாலும் சாகாது
அவர் கவிகள். எக்காலமும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருப்பார்.

(7500)

**மஞ்சவனப்பதி வடக்கு வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். 12.01.2017**

**என்றும் மறவாத அன்பு மனைவி பவானி,
மக்கள்:- க.பேரின்பதாசன், க.தவமணிதாசன்,
க.தனபாலசிங்கம், தேவகாந்தி ஞானசூரியன், க.நந்தகுமாரி.**

# இராசி பலன்

17.01.2017
(தை 04, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 3.17 மணிவரை
உத்தரம் பின்னிரவு 4.01 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
சண்டேசுரர் குருபூசை
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| கேது சுக் | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம் காலை 8.37 இற்கு கன்-சந் | | |
| சூரி | | | சந் ராகு |
| புத | சனி | குரு | |

**மீனம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மைத்துனர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கும்பம்:** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், குறைவாகப் பேசினாலும் குறைகூறாமல் பேசாமல் இருப்பது நல்லது, குடும்பப் பொறுப்புகள் கூடும் நாள்.

**கடகம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், கூட்டு முயற்சி வெற்றி தரும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய முயற்சிகள் வெற்றி தரும்.

**சிம்மம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் அக்கறை காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.




படங்கள் :- உ.சாளின்,சசி




தேசிய நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிகழ்வு நேற்றைய தினம் முற்பகல் 11.30 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் எச்.எம் .பௌசி, வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# எம்.ஜி.ஆர். நினைவு தினத்தை முன்னிட்டு யாழில் ஐம்பது கலைஞர்கள் கௌரவிப்பு



தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் புரட்சி நடிகரும் சினிமா நடிகருமான எம்.ஜி.ஆர். என்று மக்களால் அழைக்கப்பட்டு வந்தவருமான காலஞ்சென்ற இராமச்சந்திரனின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இம்மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள இலங்கை சர்வோதய அமைப்பினது யாழ்ப்பாணத்திற்கான இணை அலுவலகமாக செயற்பட்டு வருகின்ற சர்வோதய மண்டபத்தில் நினைவு தினம் இடம்பெறும். சர்வோதய அமைப்பின் இணை அமைப்பான தேசோதய சபையினது யாழ். மாவட்டத்தின் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ஆ. நடராஜன் கலந்து கொள்வார்.

இந்த விழாவில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த பல் துறை சார்ந்த கலைஞர்கள் 50 பேர் வரை கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவிக்கப்படவிருக்கின்ற பல்துறை சார்ந்த கலைஞர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னதாக தங்களின் ஒவ்வொருவர்களினது முழுப்பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், துறை சார்ந்த துறைக்கான உறுதிபடுத்தப்பட்ட சான்றுகள் கொண்ட பிரதிகள், அடையாள அட்டையினது இலக்கம் போன்ற விபரங்களுடன் தலைவர், தேசோதய சபை (சர்வோதய அலுவலகம்) கண்டி வீதி அரியாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சுவாமி விவேகானந்தரின் 155ஆவது ஜெயந்தி விழா



யாழ்ப்பாணம் இராமகிருஸ்ண மிஷன் நலன்புரி நிலையத்தால் நடத்தப்படும் சுவாமி விவேகானந்தரின் 155ஆவது ஜெயந்தி விழா நாளை மறுதினம் 19ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இல.17, மருதனார்மட வீதி, உரும்பிராய்ச்சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி விஜயலக்ஷ்மி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்-2016

**நீர்வேலி.அத்தியார் இந்துக் கல்லூரி**

கலைப்பிரிவு

சே.பார்த்தீபன்-2பிசி, ஸ்ரீ.பிருந்தா-2பிசி, செ.கார்த்திகா-2பிசி, இ.யசிதா-ஏ2சி, ந.நடனசபேசன் பி2சி, பே.தீபலோஜினி பி2சி

வர்த்தகப்பிரிவு

வா.நிரூபன்-பி2சி

## கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும் நாளை புதன்கிழமை மு.ப.10 மணிக்கு தரம் 2 பொறுப்பாசிரியர் ஸ்ரீரஞ்சினி விசுவாசம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பழைய மாணவர் தர்மலிங்கம் ரவீந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். (இ-7)

## சகஸ்ர சங்காபிஷேகம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மணவாளக் கோலத்திரு விழாவும் நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறும். (இ-3)

# சமூகமட்ட அமைப்புக்கள் மூலம் தான் மக்களின் தேவைகளை அறிய முடியும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

சமூக மட்ட அமைப்புக்களின் மூலமே மக்களின் உண்மையான தேவைகளை அறிந்து கொள்ள முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் உலக வங்கியின் மூலோபாய சமூக மதிப்பீட்டு தொடர்பான கலந்தறிதல் கருத்தரங்கு நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் உள்ள மக்களின் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி அரசிற்கு தெரியப்படுத்துவதும் அதனூடாக அபிவிருத்திகளை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டு உலக வங்கியினருடனான இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், முன்னாள் அரச உத்தியோகத்தர்கள், புத்திஜீவிகள், உலக வங்கியின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

சமூக மட்ட அமைப்புக்கள், புத்திஜீவிகள் மற்றும் பிரதிநிதிகளூடாகத்தான் சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ள முடியும். அவர்களின் ஊடாக மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புகள் என்பவற்றை வெளிப்படுத்த முடியும். ஆகவே தான் சிவில் சமூக பிரநிதிகளுடன் உலக வங்கி மேற்குறித்த கலந்துரையாடலை நடத்தியிருந்தது. இதில் மக்களுக்கு தேவையான விடயங்கள், எதிர்பார்ப்புக்கள், பிரச்சினைகள் தொடர்பாக சிவில் சமூக பிரதிநிதிகள் விளக்கியிருந்தனர்.

அதன் மூலம் வருங்காலத்தில் எமது மாவட்டத்தில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவும் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல இது உதவியாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.


யுத்தத்திற்கு பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட முக்கியமாக வடக்கு, கிழக்கிற்கு அபிவிருத்தி திட்டங்கள் அரசினால் அதிகமாக தற்போது முன்வைக்கப்படுகிறது. எனவே மேற்குறித்த கலந்துரையாடலின் மூலம் உள்வாங்கப்பட்ட கருத்துக்களை உலக வங்கியினர் முன்னிலைப்படுத்தி வடக்கில் உள்ள பிரச்சினைகள் பற்றி அரசிடம் முன்வைப்பார்கள். அதன் பின்னர் தேவைகளின் அடிப்படையில் திட்டங்களை முக்கியத்துவப்படுத்தி திட்டம் தயாரிக்கவும் நிதிகளை பெறுவதற்கும் இது ஒரு இறுதி சந்தர்ப்பமாக உள்ளது. வடக்கில் உள்ள மக்களின் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி அரசிற்கு தெரியப்படுத்துவதே உலக வங்கியினருடனான இக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 50 | 50 | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 110 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 160 | 240 | 160 | 300 | 180 |
| தக்காளி | 160 | 200 | 100 | 140 | 180 | 200 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 80 | 60 | 80 | 60 | 60 |
| கோவா | 20 | 20 | 30 | 30 | 30 | 40 | 30 |
| கரட் | 80 | 40 | 60 | 120 | 60 | 120 | 40 |
| பூசணி | 80 | 50 | 60 | 60 | 60 | 60 | 50 |
| புடோல் | 80 | 50 | 80 | 100 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 70 | 80 | 70 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 280 | 320 | 280 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 160 | 100 | 120 | 160 | 180 | 160 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 120 | 80 | 120 | 80 |
| பீற்றூட் | 60 | 100 | 80 | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 160 | 200 | 160 | 300 | 160 |
| முருங்கைக்காய் | 450 | — | 500 | — | — | 600 | — |
| போஞ்சி | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | — | 30 | — | 40 | 50 |
| கீரை-1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 | 30 | 10 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 | 300 | 220 | 400 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 20-40 | 50 | 50 | 50 | 40-60 | 40 |
| இராசவள்ளி | 200 | 200 | 250 | 300 | 220 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 180 | 150 | 180 | 200 | 180 |
| முள்ளங்கி | 40 | 100 | 60 | 60 | 60 | 60 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 60 | 60 | 60 | 100 | 60 |








தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற நல்லிணக்க வார நிகழ்வு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் நடைபெற்றது. இதில் இராஜாங்க அமைச்சர் எச். எம். பெளசி, அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி வெளிநாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா , ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம் . முகுந்தன் , வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸ் , பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ. த. ஜெயசீலன் , கல்வி அதிகாரிகள் மற்றும் விருந்தினர்களை மாணவர்கள் வெற்றிலை கொடுத்து வரவேற்று மலர் மாலைகள் அணிவித்து பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் பாடசாலைக்கு அழைத்து வந்தனர். தேசியக் கொடி , பாடசாலைக் கொடி என்பன ஏற்றப்பட்டதையடுத்து பிரதான மண்டபத்தில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. (படங்கள்:- மகாலிங்கம்)

## பொருத்து வீட்டு திட்டத்திற்கு விண்ணப்ப முடிவுத்திகதி 20ஆம் திகதி வரை நீடிப்பு

பொருத்து வீட்டு திட்டத்திற்காக விண்ண்ணப்ப முடிவுத்திகதி 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டீ.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் முதற்கட்ட 10 ஆயிரம் பொருத்து வீட்டு திட்ட முடிவு திகதி இம் மாதம் 14 ஆம் திகதி ஆகும். எனினும் கடந்த நாட்களில் வந்த விடுமுறைகள் மற்றும் வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் மற்றும் அமைப்புக்களின் வேண்டு கோளினை கருத்திற்கொண்டு விண்ணப்ப திகதி எதிர்வரும் 20 ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)





சுதுமலை முருகமூர்த்தி ஆலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாட்டுப் பொங்கல் விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டார். (படங்கள்:-பொ.சோபிகா)

## ஆட்டோ சாரதிகளிடம் பணம் மோசடி செய்த கர்ப்பிணி கைது

ஆட்டோ சாரதிகளை ஏமாற்றி பணத்தைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகும், முஸ்லிம் பெண்கள் போன்று உடையணிந்த பெண ஒருவரை கொஹுவல பொலிஸார் கைது செய்துள்ளனர். இப்பெண்ணின் மோசடியில் ஏமாந்த பல ஆட்டோ சாரதிகள் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்தபோது கிடைத்த தகவலொன்றையடுத்து பொலிஸார் களுபோவிலயில் வைத்து நேற்று இப் பெண்ணை கைது செய்துள்ளனர். கைதான பெண் 26 வயதான பிலியந்தலையைச் சேர்ந்தவராவார்.

இவர் கர்ப்பிணி என தன்னை இனங்காட்டிக்கொண்டு ஆட்டோ ஏறுவார். வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு விற்றமின் வில்லை வாங்குவதற்கு தெஹிவளை செல்ல வேண்டுமென கூறி தெஹிவளை செல்வார். செல்லும் "வழியில் என்னிடம் பணமில்லை. நான் வில்லைகளை வாங்கிய பின் பணம் தருகிறேன் எனத் தெரிவித்து பணத்தை பெற்று தலை மறைவாகி விடுவர் என தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## பேஸ்புக்,டுவிட்டர் மூலம் நாமல் ராஜபக்ஷ நாடகம்

(கொழும்பு)

நாமல் ராஜபக்ஷ பேஸ்புக் மற்றும் டுவிட்டர் மூலம் தனது பிரசாரத்தினை மேற்கொள்ள பெரும் முயற்சிகளை செய்து வருவதில் வல்லவராக திகழ்கின்றார்.

தங்களது குடும்பத்தவர் யாரா வது விசாரணைக்காக அழை க்கப்படும் போது அது தொடர்பிலான செய்தி யினை அவரது முகப் புத் தகத்தில் காணக்கூடியவாறு உள்ளது. அதேபோலவே அவரதுதாயான ஷிராந்தி ராஜபக்ஷ விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது அந்த செய்தியினையும், தனது கருத்தினையும் அங்கு பதிவேற்றி மக்கள் மத்தியில் அ[illegible]ாபத்தினை பெறுவதற்கு முனைப்பு காட்டினார்.

இதனை தொடர்ந்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் கேள்வி பதில் பகுதியை ஆரம்பித்து மக்களின் கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் சிக்கலில் மாட்டிக் கொண்டதும் உண்டு.

டுவிட்டர் பக்கத்தில் சிலர் சட்ட பரீட்சை எழுதியமை தொடர்பில் கேள்விகளை எழுப்பியதும், அது அவரை மிகவும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தி விட்டதனையும் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துபவர்கள் அறிந்த விடயமாகும்.

இதுமட்டுமல்லாமல் அந்த கேள்விகளுக்கு பதிலளிக்காமல் வெளியேறியமையை இணையத்தளங்களில் செய்தியாக தெரிவித்திருந்தனர். இருந்தாலும் இதுவரைக்கும் அது தொடர்பில் முழுமையான விபரத்தினை கூறவில்லை.

மேலும் நாமல் ராஜபக்ஷ கடந்த 7 ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினையும் தனக்கு சாதகமாக பயன்படுத்தி செய்தியை டுவிட்டர் மற்றும் பேஸ்புக்கில் பிரசுரித்தமை தொடர்பிலும் சில சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Diploma/அரச தொழில்<br>தொ.இ: B/6762 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/3724 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>தகைமை/தொழில்:O/L/ சாரதி<br>தொ.இ: B/6763 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3742 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 11<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/Lடென்மார்க் PR<br>தொ.இ: B/6765 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/3782 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 34செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6766 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தாதி<br>தொ.இ: G/3786 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# ஏ-9 வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையம் திறப்பு







வவுனியா- யாழ்.வீதியில் அமையப் பெற்ற புதிய மத்திய பேருந்து நிலையத்தை மத்தியபோக்குவரத்து துறை அமைசசர் நிமால் சிறீபால டி சிலவா நேற்று திறந்து வைத்தார்.

மத்திய அரசாங்கத்தினால் 195 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட




உள்ளூர் மற்றும் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தை மேற்கொள்கின்ற பேருந்துக்களுக்கான பிரதான தரிப்பிடமே அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் 13 பேருந்துகள் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவையிலும், 21 பேருந்துகள் உள்ளூர் போக்குவரத்து 'சேவையிலும் ஈடுபடத்தக்க வகையில் ஏ-9 வீதியில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் நாளாந்தம் 100 பேருந்துகள் வந்து செல்லத்தக்க வகையில் நவன முறையில் இப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் அபயசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பிரதி போக்குவரத்து அமைச்சர் அபேக்க அபேயசிங்க, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், கே.கே. மஸ்தான், வடக்கு மாகாண



ஆளுநர் றெஜினோல்ட் குரே, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ.கமலநாதன், ஜி.ரி.லிங்கநாதன், ம.ஜெயதிலக, அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, தனியார் பேருந்து சங்கத் தலைவர் மற்றும் அதன் உரிமையாளர்கள், இலங்கை போக்குவரத்து சபையினர் எனப்பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (2-250-15)

## பூமலர்ந்தான் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது



மீள்குடியேற்றக் கிராமமான மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட 2 ஆம் கட்டை பூமலர்ந்தான் கிராமத்தில் அமைக்கப்பட்ட "பூமலர்ந்தான் ஆரம்பப் பாடசாலை" நேற்று திங்கட்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது.

பூமலர்ந்தான் ஆரம்பப் பாடசாலையின் அதிபர் எம். விற்றர் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மடு பிரதேசச் செயலாளர் எப்.சி.சத்தியசோதி , மடு வலயக்கல்விப்பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த ஆரம்பப் பாடசாலையை ரீதியாக திறந்து வைத்தனர்.

பின்னர் விருந்தினர்கள் பாடசாலை வளாகத்தில் பலன் தரும் மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

இதனைத்தொடர்ந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த கிராமத்தில் தற்போது சுமார் 200 குடும்பங்கள் வரை வாழ்ந்து வருகின்றன.

இக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று வர வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பாடசாலை அமைக்க சகல அனுமதியும் கிடைக்கப்பெற்ற நிலையில் ஆரம்பப் பாடசாலை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9)

## மாற்றுத்திறனாளிகளுக்கான கட்டட வசதிகளை பூநகரி பிரதேச செயலகத்தில் அமைக்கவுள்ளோம்

### செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்தில் மாற்றுத்திறனாளிகள் சென்று தமது தேவைகளை பெற்றுக்கொள்வதற்கான கட்டட வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என மாற்றுத்திறனாளிகளினால் தெரிவிக்கப்படுகின்றது. பூநகரி வாடியடிச் சந்தியிலே புதிய பிரதேச செயலகக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இங்கு செல்லும் மாற்றுத்திறனாளிகளே தாம் சென்று வரும் வகையில் கட்டடத்தில் கட்டட அமைப்பு மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பூநகரி பிரதேசசெயலாளர் ச.கிருஸ்ணேந்திரனிடம் வினவிய போது திறந்து வைக்கப்பட்டுளள புதிய கட்டடத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை. காரணம் பிரதேச செயலகத்திலே கட்டட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாற் றுத்திறனாளிகளுக்கான கட்டட வசதிகளையும் உருவாக் குவோம். கட்டட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாக பழைய பிரதேச செயலகக் கட்டடத்தில் காணிக் கிளை, திட்டமிடல் கிளை தொடர்ந்து இயங்குகின்றது. வாகனத் தரிப்பிடங்கள், வேலிகள் அமைக்கும்பணிகளும்இடம்பெறவுள்ளன. இருப்பினும் எம்மை நாடிவரும்மக்களுக்கான பணிகளை இலகுபடுத்துவதற்கான வழிகளிலும் நடவடிக்கைகளிலும்ஈடுபட்டுள்ளோம் எனவும் தெரிவித்தார். (2-312)

## சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞன் கைதானான்

வவுனியா. சுந்தரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் 14 வயது சிறுமி மீது துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவருவதாவது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையில் தனியார் வீட்டில் இருந்த 14வயது சிறுமி ஒருவரை அவரது 26 வயதுடைய உறவினர் ஒருவர் கடைக்கு அழைத்துச் சென்றுள்ளார். கடை மூடியிருந்ததையடுத்து அருகிலுள்ள யாருமற்ற வீட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாக கூறப்படுகின்றது.

இதையடுத்து வீட்டிற்கு வந்த சிறுமி சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்துள்ளதை அறிந்த வீட்டார் சிறுமியிடம் விடயத்தினை கேட்டறிந்ததுடன் சம்பவம்தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளதுடன் சிறுமியை வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

முறைப்பாட்டினையடுத்து மேற்கொண்ட விசாரணைகளின் பின் உறவு முறையான குறித்த இளைஞனை பொலிஸார் கைது செய்ததுடன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)

## சிறுவர் இல்லத்திற்கு அரிசிப் பக்கற்றுகள் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள விழிப்புலன், செவிப்புலனற்ற 50 மாணவர்கள் தங்கியிருந்து கல்விபயிலும் இனிய வாழ்வு இல்லத்திற்க்கு இரண்டு மாத காலத்திறகு தேவையான 500 கிலோ கிராம் அரிசிப் பக்கற்றுகள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இனிய வாழ்வு இல்ல நிர்வாகத்தினால் தமது இல்ல பிள்ளைகளுக்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்து தருமாறு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் முன்வைத்துள்ள உணவுப் பொருட்களுக்கான பட்டியலுககு அமைவாகவே முதற்கட்டமாக இரண்டுமாத காலத்திற்கு தேவையான சம்பா அரிசி 200 கிலோ, குத்தரிசி 200 கிலோ, பச்சை அரிசி100கிலோ என்பனவற்றை நேற்று முன்தினம இனிய வாழ்வு இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளன.(2-15)

## தீர்வு பெற்றுத் தரும்வரை அதிபருக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது

### சிறிதரன் எம்.பியின் வாக்குறுதியையடுத்து கவனயீர்ப்பு கைவிடப்பட்டது



கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கிளி / சிவநகர அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதபரை இடமாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை காலை 7.30 மணிமுதல் ஆரம்பமாகி முற்பகல் 10 மணி வரை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பாடசாலையில் இருந்து பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று சென்றுள்ள நிலையில். அவர்களுக்கு மாற்றீடான ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் அதிபரையும் இடமாற்றுவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிராகவே தாம் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் தெரிவித்துள்ளார்கள்.

இந்த பாடசாலையானது கல்வித் தரத்தில் முன்னேறியுள்ள போதிலும் ஆசிரியர் வளப் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழலில் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மாற்றீடாக தமக்கு போதுமான ஆசிரியர்களை நியமிக்கும் வரை அதிபர் இடமாற்றத்தை கைவிடவேண்டும் என மாணவர்களும் ஆசிரியர்களும் கோரிக்கையை முன்வைத்திருந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேளமாலிகிதன் சம்பவ இடத்திற்கு வருகை தந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார். இந்தப் பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்ததும் கலந்துரையாடி நல்லதோர் தீர்வைப் பெற்றுத் தரும் வரை அதிபருக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என வழங்கிய வாக்குறுதியினையடுத்து ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது. (2-15)

# நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு வவுவில் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(மல்லாவி)

**வவுனியா மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் உள்ள பொது இடங்களில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் கண்டு முற்றாக அழித்தொழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா நகரப்பகுதிகள் மற்றும் குடியிருப்பு தொகுதிகள் உட்பட பாடசாலைகள், மக்கள் கூடும் பொது இடங்கள் ஆகியவற்றில் நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் மருந்துகளை பிரயோகிக்கும் நடவடிக்கைகளும் புகையடிக்கும் வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்தகைய வேலைத் திட்டங்கள், வவுனியா நகரசபையுடன் இணைந்து பொலித்தீன்கள், ரயர்கள், மேலும் நுளம்பு பெருகும் இடங்களை அடையாளங் கண்டு அகற்றும் நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன.

அத்துடன் பொது மக்களைத் தெளிவூட்டும் வகையில், ஒலிபெருக்கி மூலம், நுளம்பு பெருகும் இடங்கள் காணப்படின் முற்றாக அழிக்குமாறும், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு பூரணமாக ஒத்துழைப்பு வழங்குமாறும் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் அவதானமாக இருக்கவும் உயிர்கொல்லி டெங்கு நோய் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதற்கான பாதுகாப்புடன் இருங்கள். காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாக அருகிலுள்ள அரச வைத்திய சாலைகளில் உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளுங்கள் எனவும் பொது மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (2-15)




# பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

வவுனியா, புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகம் தெரிவாகிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பா.பார்த்தீபன் தலைமையில் தைப்பொங்கல் தினத்தன்று நிகழ்வு மைதான அரங்கத்தில் இடம பெற்றது.

வவுனியா, புதுக்குளம் பாடசாலையில் கல்வி கற்று தற்போது வெளியாகிய உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கணித துறையில் மாவட்ட மட்டத்தில் நான்காம் இடத்தை யும், வர்த்தக பிரிவில் மாவட்டத்தில் முதல்நிலையையும், கலைத்துறையில் மாவ ட்டத்தில் எட்டாம் நிலையையும் பெற்ற மாணவர்கள் மற்றும் இப்பகுதியில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் 12 பேர் உட்பட மொத்தம் 15 மாணவர்களுக்கு கௌரவிப்பும், அவர்களுக்கான சிறு உதவு தொகையும் வழங்கப்பட்டது.

மாணவர்கள் புதுக்குளம் சிவன் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு சித்திவிநாயகர் விளையாட்டு மைதான அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இது தவிர, தைத்திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிநேகபூர்வ கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டது. (2-250)

# மதுபான விற்பனை நிலையத்தை அகற்றுமாறு கோரி மகஜர் கையளிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாரதிபுரம் செபஸ்தியார் வீதியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையத்தை அங்கு இருந்து அகற்றுமாறு கோரி மகஜர் ஒன்றை பாரதிபுரம் மக்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளித்துள்ளனர்.

இம் மகஜரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கையளித்துள்ளனர்.

இது தொடர்பாக அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு,

இந்த மதுபான விறபனை நிலையம் இரணைமடு சந்திக்கு அண்மையாகவும் இரணைமடுவில்உள்ள பொதுச சந்தைக்கு எதிரிலும் காணப்படுகின்றது.

இந்த மதுபான விறபனை நிலையம் இரணைமடு சந்தியில் இருந்து பாரதிபுரத்திற்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளதால் பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம் போன்ற கிராமங்களை சேர்ந்த மக்கள் தினசரி இவ் வீதியால் பயணிக்கும் போது மதுப்பிரியர்களால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறனர். குறிப்பாக பாடசாலை மாணவர்கள், தனிமையில் செல்லும் பெண்கள் பெரும் இடையூறுகளையும், மன உளைச்சலுக்கும் உட்பட நேரிடுகின்றது.

இதேவேளை இந்த மதுபான விற்பனை நிலையத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் வீதியின் இரு பக்கங்களிலும் சைவ ஆலயங்களும், 100, மீற்றர் தொலைவில் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றும், 150, மீற்றர் தொலைவில் சிறுவர் முன்பள்ளி ஒன்றும் அமைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் மதுபான விற்பனை நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரி சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் பாரதிபுரம், மலையாளபுரம் மற்றும்கிருஸ்ணபுரம்போனற கிராமங்களை சேர்ந்த பொது அமைப்புக்களினால் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிற்கு அனுப்பி வைத்திருந்தோம்.

இதன் பிரதிகள் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைகளம், பனை தென்னை வள அபிவிருத்திச்சங்கம் ஆகிய இடங்களிற்கும் கையளித்து நேரிலும் எமது பிரச்சனையை தெரிவித்திருந்தோம்.

ஆயினும் சில இடங்களில் இருந்து நாம் அனுப்பிய மகஜரிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் கடிதம் ஒன்று வந்ததே தவிர எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.இந்த மதுபான விற்பனை நிலையத்தை அந்த இடத்தில் நடத்துவதற்கான அனுமதி இவ்வருடத்துடன் நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ள போதும் உத்தியோகபூர்வமான தகவல்கள் எவையும் இதுவரை வெளியாகாத நிலையில் மதுபான விற்பனை நிலையம் வழமை போல் இயங்கி வருகின்றது.

மதுபான விற்பனை நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வடக்கு பொது அமைப்புக்களுடன் சமகால நிலவரம் தொடர்பில் கலந்துரையாடல்



(வவுனியா)

வவுனியா வடக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் சமகால நிலவரம் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வவுனியா வடக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உட்பட வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

வவுனியா நயினாமடு பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறிப்பாக வரட்சி மற்றும் நீர்ப்பிரச்சினை, விவசாயத்திற்கான நட்ட ஈடு தொடர்பாகவும் இதன் போது பொது மக்களால் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர் இந்திரராசா, எம் தியாகராசா உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# மணவாளக்கோல விழா

(சிவநகர்)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் மணவாளக்கோலவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

1008 கும்பங்கள் வைத்து பூசை வழிபாடுகள் நடைபெற்று இரவு சுவாமி வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு முருகனருள் பெற்றுய்யுமாறு ஆலய பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

# மக்களின் நிலைப்பாட்டை புரிந்து கொண்டு அதிகாரிகள் இதயச் சுத்தியுடன் சேவையாற்ற முன்வர வேண்டும்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

(மன்னார்)

கடந்த காலங்களிலே நாங்கள் முன்னேற முடியாத பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளோம்.

எங்களுடைய எத்தனையோ உறவுகளை நாங் கள் இழந்திருக்கின்றோம்.

எத்தனையோ விதமான விளையாட்டு வீரர்களை நாம் யுத்தத்திலே பலி கொடுத்துள்ளோம்.இந்த நிலையில் இன்று மலர்ந்திருக்கின்ற இந்த சமாதானத்திலே இந்த மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என அமைச்சர் றிசாத் பதியுதீன் உருக்கமாக தெரிவித்தார்.

இலங்கை அரச பேரக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலையின் ஏற்பாட்டில் கடந்த 12 ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான அரச திணைக்களங்களுக்கிடையிலான மாபெரும் விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இம் மாவட்டத்தில் வாழ்கின்ற கத்தோலிக்க, இந்து, இஸ்லாமிய ஆகிய மூவின மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றவர்களாக விட்டுக்கொடுப்போடு வாழ்ந்து ஒருவருக்கு ஒருவர் துன்பம் வருகின்ற போது மற்றவர்கள் அவர்களுடைய துன்பத்தில் பங்குகொள்பவர்களாக, மற்றவர்களுடைய சந்தோசத்திலே நாங்களும் சேர்ந்து மகிழ்பவர்களாகவும் இருக்க பழகிக்கொள்ள வேண்டும்.

யுத்த வடுக்களினால் ஆயுதப்போராட்டத்தில் பங்கெடுத்து நீண்டகாலம் சிறையில் இருந்து வெளியேறி வாழ வழியின்றி கஷ்டப்படுகின்றவர்களுக்கு கைகொடுப்பவர்களாகவும் அதேபோல யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக சென்று ஓடி.ஓடி எல்லாவற்றையும் இழந்து இன்று எதிர்நீச்சல் போட முடியாது தத்தளிக்கின்ற ஏழைகளுக்கு கைகொடுக்கின்றவர்களாகவும் எங்களை நாங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

அரச அதிகாரிகளிடத்தில் தமது தேவைகளுக்காக வருகின்ற பொதுமக்களிடம் மனிதாபிமானத்தோடும், இரக்க சிந்தனையோடும் நோக்குகின்ற மனப்பக்குவம் எல்லா உத்தியோகத்தர்களுக்கும் நிச்சயமாக இருக்க வேண்டும்.

எனவே அதிகாரிகள் வருகின்ற மக்களின் நிலைப்பாட்டை புரிந்து கொண்டு இதய சுத்தியுடன் சேவை செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்தார். (2-9)




கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தைச் சேர்ந்த 96 முதி யோர்களுக்கு ஊற்றுப்புலம் முதியோர் அமைப்பின் ஏற்பாட்டில் அறிவொளி வலயத்தினால் பழமரக் கன்றுகள் கடந்த 14 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்ட போது...

(படங்கள் :-சோலைநகர் செய்தியாளர்)

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2017-12.02.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*சாஸ்திரத்தையும், சட்டத்தையும் கற்று வைத்திருக்கும் துலாம் இராசி அன்பர்களே!*

உங்களின் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சுக்ரன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு தனாதிபதி செவ்வாய் இணைந்திருப்பதால், பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். செய்ய நினைத்த காரியத்தை செய்ய நினைத்த நேரத்தில் செய்துமுடிப்பீர்கள். விரயாதிபதி மூன்றில் இருப்பதால் உடன்பிறப்புகளின் வழியே விரயங்கள் ஏற்படலாம்.

மேலும் 9இற்கு அதிபதியாக குரு விளங்குவதால், இதுவரை உங்கள் மீது பாசம் காட்டாத பெற்றோர் இப்பொழுது பாசம் காட்டுவர். நேசமனப்பான்மையுடன் உங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் முன்வருவர்.

லாபாதிபதி சூரியன் 4இல் இருப்பதால், தாயின் உடல்நலத்தில் கூடுதல் கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கும் பொறுப்புகள் கூடுதலாகக் கிடைக்கலாம். மேலதிகாரிகள் உங்கள் கருத்துகளுக்கு ஒத்துவருவர்.

குரு உங்கள் இராசியில் அடியெடுத்து வைக்கும் மாதமிது. ஜென்ம குருவாக வருவதால் சில மாற்றங்கள் வந்துசேரும். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் எப்படியாவது ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை அல்லது நிர்ப்பந்தம் உருவாகிவிடும். 'ஜென்ம ராமர் வனத்திலே' என்பது ஒரு பழைய பாடல். ஜென்ம இராசியில் குரு வந்த பொழுது, ராமர் வனவாசம் சென்றதாகக் கூறுவார்கள். ஆனால் மற்ற கிரகங்களையும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

உங்களைப் பொறுத்தவரை 3.6இற்கு அதிபதியாக குரு விளங்குவதால், உத்தியோகத்தில் மாற்றம், ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் ஆகிவில்லையே என்ற கவலை அகலும். உடன்பிறப்புகளின் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். நந்தியெம்பெருமானை வழிபட்டு வந்தால் கேட்ட வரம் கிடைக்கும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 16ஆம் திகதி மீன இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். 2,7இற்கு அதிபதியான செவ்வாய் 6இல் சஞ்சரிக்கும் பொழுது, வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து, வருமானப் பெருக்கம் ஏற்படும். சொத்துகள் வாங்க, விற்க எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும்.

**ஜென்ம குருவின் சஞ்சாரம்!**

ஜனவரி 16ஆம் திகதி உங்கள் இராசிக்கு, குரு வக்ர இயக்கத்தில் வருகிறார். அதன் பார்வை 5.7.9 ஆகிய இடங்களில் பதிகின்றது. பொறுப்புகள் நல்ல விதமாக நடைபெறும்.

விழாக்களிலும், விருந்துகளிலும் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும். பாராட்டும் புகழும் கூடும்.

எனவே குடும்ப முன் னேற்றம் கூடும். முயற்சித்த காரியங்களில் இருந்த தடைகள் விலகும். முக்கியப் புள்ளிகளின் ஒத்துழைப்போடு சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வீர்கள். கல்யாணக் கனவுகள் கைகூடும். பயணங்கள் அதிகரிக்கும்.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**




உங்கள் இராசிநாதனாகவும், அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்ரன், ஜனவரி 27ஆம் திகதி மீன இராசியில் உச்சம் பெற்று விளங்குகிறார். இந்தக் காலத்தில் நட்பு பகையாகலாம். நல்ல வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். விலையுயர்ந்த பொருட்களை விற்க நேரிடலாம். உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 30ஆம் திகதி மகர இராசிக்கு புதன் செல்கிறார். இதன் விளைவாக ஒரு சிலருக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். கல்வி முயற்சி கைகூடும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் ஜென்ம குருவால் சிறுசிறு மாற்றங்கள் ஏற்படும். நன்மையும், தீமையும் கலந்தே வந்து சேரும். ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்படலாம். தாய்வழி ஆதரவு சிறப்பாக இருக்கும்.

கணவன், மனைவிக்குள் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க, விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பிறரை விமர்சிப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் வீண்பழிகளில் இருந்து விடுபட இயலும்.

## ஜென்ம குருவால் இடமாற்றம்!

நகை வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். பிள்ளைகளால் பெருமை சேரும். உடன் பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும். குல தெய்வ வழிபாடு உங்கள் குடும்பப் பெருமையை உயர்த்தும். ஆதியந்தப் பிரபு வழிபாடு அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொடுக்கும்.



*ஆலோசனை சொல்வதில் சூரர்களான விருச்சிக இராசி அன்பர்களே!*

உங்களின் தை மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு சுக்ரன் இணைந்து சுக்ர, மங்கள யோகத்தை உருவாக்குகிறார். அஷ்டம லாபாதிபதியான புதன் 2ஆம் இடத்தில் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே தனவரவு திருப்திகரமாகவே இருக்கும். எதைச் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதைச் செய்து முடிப்பீர்கள்.

நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள். ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றாலும் தனாதிபதியும், லாபாதிபதியும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நல்ல விதமாக நடைபெறும்.

விருப்பம் போல வீடு, மனை அமையும். தடைகளை அகற்றும் ஆற்றல் இறை வழிபாட்டிற்கு உண்டு என்பதை நீங்கள் அனுபவத்தில் கண்டு கொண்டிருப்பீர்கள்.

அந்த அடிப்படையில் ஜென்மச் சனிக்குப் பரிகாரமாக விநாயகப் பெருமானையும், அனுமனையும் வழிபாடு செய்யுங்கள். கதிரவனையும், நந்தியெம்பெருமானையும் வழிபடுவது நல்லது. மேலும் தைத் திங்களில் குலதெய்வ வழிபாடுகளையும் மேற்கொண்டால் குடும்ப முன்னேற்றம் கூடும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 16ஆம் திகதி மீன இராசிக்கு, செவ்வாய் செல்லவிருக்கிறார். உங்கள் இராசிநாதனாகவும், 6இற்கு அதிபதியாகவும விளங்குபவர் செவ்வாய். ஜீவன ஸ்தானாதிபதியாக விளங்கும் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். நினைத்துப் பார்க்காத சில நிகழ்வுகளும் நடைபெறலாம். அனைத்திற்கும் மேலாக பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து நலன்களும் இப்பொழுது வந்து சேரும். புதிய பாதை புலப்படும். பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில், எதிர்பார்த்த நற்பலன்கள் உண்டாகும். வங்கிச் சேமிப்பு உயரும்.

**குருவின் வக்ர இயக்கம்!**

ஜனவரி 16ஆம் திகதி துலாம் இராசிக்கு, குரு வக்ர இயக்கத்தில் வருகிறார். தன பஞ்சமாதிபதி விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால், பிள்ளைகளால் சிறு விரயம் ஏற்படலாம். கல்யாண முயற்சி கைகூடும் நேரமிது. வரன்கள் வாசல் தேடி




வரலாம். அவற்றைப் பரிசீலனை செய்து மங்கள ஓசை மனையில் கேட்கவழி வகுத்துக் கொள்ளுங்கள். படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பத்திருந்தால் அதுவும் கிடைக்கும்.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 27ஆம் திகதி மீன இராசிக்கு, சுக்ரன் செல்கிறார். சப்தமாதிபதி உச்சம் பெறும்பொழுது வாழ்க்கைத் துணை வழியே நன்மைகள் கிடைக்கும். அவர்களின் வேலை வாய்ப்புகள் கைகூடி வருமானத்தை அதிகரிக்கச் செய்யும். அதே நேரத்தில் வெளிநாட்டு யோகம் கைகூடும். தங்கம், வெள்ளி போன்றவைகளை வாங்குவதன் மூலம் சொத்து மதிப்பு கூடும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 30ஆம் திகதி மகர இர்ாசிக்கு, புதன் செல்கிறார். அங்குள்ள சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். இதன் விளைவாக பட்டங்களும், பதவிகளும் வந்து சேரும். புதுப்புது திட்டங்களைத் தீட்டி அதில் வெற்றி காண்பீர்கள். வெற்றிக்குரிய செய்திகள் வந்து சேரும் நேரமிது.

இம்மாதம் நந்தீஸ்வரர் வழிபாட்டால் நலம் காணுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

வருமானம் திருப்திகரமாக இருக்கும் மாதம் இது. வளர்ச்சி கூடும். திறமையை வெளிப்படுத்த வாய்ப்புகள் கைகூடி வரும். தாய் வழியில் அனுகூலம் உண்டு. விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர்.

## நண்பர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியம் நடைபெறும்!

கலக்கங்கள் அகலும், கணவன், மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்க உடனிருப்பவர்கள் உறுதுணையாக இருப்பர். உடன் பிறந்தவர்களால் ஆதாயம் கிடைக்கும். குழந்தைகளால் பெருமை வந்து சேரும். குரு மாற்றத்தால் சிறு விரயம் உண்டு. குரு வழிபாடும், குல தெய்வ வழிபாடும் நன்மைகளை வழங்கும்.

(தொடரும்)

# விசேட தேடுதல் வேட்டையில் பாரியளவு போதைப்பொருள் மீட்பு

கடந்த இரண்டு நாட்களாக மேற்கொண்ட விசேட தேடுதல் வேட்டையில் 4 கோடி ரூபா பெறுமதியான கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மொனராகல் தனமல்வில மற்றும் ஹம்பாகமுவ ஆகிய பிரதேசங்களில் இருந்தே பாரியளவில் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், மூன்று சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இரண்டு நாட்களில் சுமார் 9 கஞ்சா தோட்டங்கள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காய்ந்த கஞ்சா போதைப் பொருள் 22 கிலோ கிராம் மீட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

போக்குவரத்து சிக்கல்கள் காரணமாக இந்த கஞ்சா போதைப் பொருட்கள் அந்தந்த தோட்டங்களிலேயே எரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (இ-3)






# 16 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கத்துடன் இந்திய பிரஜை கைது

16 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க பாளங்களுடன் இந்திய பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு தங்கத்தை எடுத்துச் செல்ல முயற்சித்த இந்திய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை 2.40 மணியளவில் ஸ்பைஸ்ஜெட் விமானசேவையின் ஊடாக சென்னை நோக்கிப் பயணிக்க விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதன்போதே சுங்க பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். 26 வயதான குறித்த இளைஞரிடம் இருந்து 300 கிராம் பெறுமதியான 3 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ஜெயலலிதா மரணம் திட்டமிட்டு நடந்த சதி!







(நேற்றைய தொடர்ச்சி)

பொதுவாக குடியரசுத் தின விழாவில் ஆளுநர்தான் கொடியேற்ற வேண்டும். மகாராஷ்டிரா மாநில ஆளுநராகவும் வித்யாசாகர் ராவ் இருக்கிறார்.

"அங்கு கொடியேற்றச் செல்வதால், தமிழகத்தில் முதலமைச்சர் பன்னீர்செல்வம் கொடியேற்றுவார்" என கடிதம் எழுதியுள்ளது ஆளுநர் அலுவலகம்.

"முதல்வர் பதவியில் இருந்து ஓ.பி.எஸ் விலக மாட்டார" என்பதை ஆளுநர் அலுவலக கடிதமே சுட்டிக் காட்டி விட்டது என அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர விபரித்தார்.

அ.தி.மு.கவின் முன்னாள் எம்.பி, எம்.எல்.ஏக்களை நேற்று முன்தினம் சந்தித்தார் சசிகலா. முன்னாள் அமைச்சர் நயினார் நாகேந்திரன் உடபட சிரேஷ்ட உறுப்பினர் பலரும் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

"விசுவாசமாக பணியாற்றுபவர்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது" என சசிகலா பேசிக் கொண்டிருக்கும் போது, அவர் அருகில் வந்தார் டாக்டர் வெங்கடேஷ்.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக பணியாளர் நலத்துறை அமைச்சகம் உரிய நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தியிருந்த தகவலை சசிகலாவிடம் தெரிவித்தார். ஒருகணம் அதிர்ச்சியில் உறைந்தவர், அருகில் இருந்த அறைக்குள் சென்று விட்டார். சிறிது நேரம் கழித்து வெளியே வந்தவர், கார்டனுக்குச் சென்று விட்டார்.

"சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பு எப்போது வேண்டுமானாலும் வரலாம்" என டில்லி வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன. இந்தநேரத்தில், சசிகலாவுக்கு எதிராகக் கொடுக்கப்படும் புகார்களை மத்திய அரசு பெற்றுக் கொள்வதையும் அதிர்ச்சியோடு கவனிக்கிறது சசிகலா தரப்பு.

'உங்களுக்கு எதிராக வரும் சிறு துரும்பையும் விட்டுவிட மாட்டோம்" என்பதை நேரடியாக தெரிவிக்கிறது மத்திய அரசு. எனவேதான், "நிலைமை சீராகும் வரையில் அமைதியாக இருப்போம்" என மன்னார்குடி உறவுகள் முடிவெடுத்தனர்.

கூடவே, தீபாவுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தால் எரிச்சலில் இருக்கிறார் சசிகலா. தீபாவை சந்திக்க வரும் பிரமுகர்களை உளவுத்துறை தீவிரமாக கண்காணித்து வருகிறது.

"தீபாவை இயக்குவது யார்?" என்ற கேள்விதான் வலம் வருகிறது. முதலமைச்சர் உத்தரவின் பேரில் தீபா வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர்.பிறந்தநாளான ஜனவரி 17 ஆம் திகதி அரசியல் பிரவேசம் பற்றி அறிவிக்க இருக்கிறார் தீபா. இதை மன்னார்குடி உறவுகள் எதிர்பார்க்கவில்லை. எந்த வகையில் அவரைத் தடுத்து நிறுத்துவது என்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்.

இதேவேளை அ.தி.மு.க. தலைமைக் கழக நிர்வாகி ஒருவர் இவ்வாறு கூறினார்.

"ஜனவரிக்குள் முதல்வர் ஆவது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு மன்னார்குடி உறவுகள் வந்து விட்டனர். டிடிவி தினகரனை அமுலாக்கத்துறையின் வழக்கு நெருக்கியதையும் தி.மு.க. தலைவருக்கு ஆளுநர் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்ததையும் கவனித்து வருகின்றனர் மன்னார்குடி உறவுகள். ஒருவேளை முதல்வராக சசிகலாவை முன்னிறுத்தினாலும், "ஒரு முதல்வரை அறிவித்து விட்டு, அடுத்த சில மாதங்களில் இன்னொருவரை முன்னிறுத்துவது எப்படி சாத்தியம்? பன்னீர்செல்வம் பலத்தை நிரூபிக்கவில்லையென்றால், அடுத்த முதல்வரைப் பார்த்துக் கொள்ளலாம்" எனத் தெரிவிக்கும் முடிவில் ஆளுநர் அலுவலகம் இருக்கிறது.

அரசின் பிடி முழுக்க ஆளுநர் கையில் இருப்பதை கார்டனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. மத்திய அரசை சமாதானப்படுத்த எடுத்த முயற்சிகளும் தோல்வியில் முடிந்து விட்டன. அரசியல் ரீதியாக செய்ய வேண்டிய பணிகள் குறித்து, நிதானமாகவே செயற்பட்டு வருகிறார் சசிகலா" இவ்வாறு அ.தி.மு.க. பிரமுகர் கூறினார்.


முதல்வர் கனவு தள்ளிப் போகும் கவலை ஒருபுறம் வாட்டினாலும்தீபாவின்வருகை, சசிகலா புஷ்பாவின் மனு, ஆளுநர் அலுவலக நெருக்குதல், சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பு என பிடியில் சிக்கியிருக்கிறார் சசிகலா. "இந்தியா டுடே" மாநாட்டிலும் கண்ணீரோடு காட்சியளித்தார் சசிகலா. நெருக்குதல்கள் கொடுக்கும் வலிதான் காரணமா என்ற கேள்விகளும் அரசியல் மட்டத்தில் எழுந்துள்ளன.

(முற்றும்)

# கிர்கிஸ்தானில் துருக்கி விமானம் குடியிருப்பில் விழுந்து நொறுங்கியது

## 32 பேர் உயிரிழப்பு





கிர்கிஸ்தானில் துருக்கி சரக்கு விமானம் தரை இறங்கியபோது குடியிருப்பு பகுதியில் விழுந்து நொறுங்கியதில் 32 பேர் பலியாகினர்.

துருக்கியில் உள்ள இஸ்தான்புல்லில் இருந்து கிர்கிஸ்தான் தலைநகர் பிஸ்கெக்குக்கு துருக்கி ஏர்லைன் சரக்கு விமானம் ஒன்று நேற்றுக்காலை புறப்பட்டு சென்றது.

அது ஹொங்கொங் வழியாக பிஸ்கெக் பகுதியை வந்தடைந்தது.

உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 7.30 மணிக்கு அங்கு தரை இறங்கியது.

அப்போது கடுமையான பனி மூட்டம் இருந்தது. அதனால் தவறுதலாக பிஸ்கெக் அருகேயுள்ள டசா-சூ கிராமம் அருகே இறங்கியதால் குடியிருப்பு பகுதியில் விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் 32 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர்.

அவர்களில் 4 பேர் விமானிகள்.

இத்தகவலை கிர்கிஸ்தானின் அவசர சேவைகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# ஜப்பானின் சிறிய ரொக்கெட் செலுத்தும் முயற்சி தோல்வி

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் மிகச் சிறிய ரொக்கெட் மூலம் மிகச் சிறிய செயற்கைக்கோள் ஒன்றை விண்வெளியில் செலுத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்தது

இதற்காக 9.5 மீற்றர் நளம் கொண்ட ஒரு ரொக்கெட் வடிவமைக்கப்பட்டது. 35 செ.மீ. மட்டுமே உயரம் கொண்ட ஒரு செயற்கைக் கோளும் உருவாக்கப்பட்டது.

கடந்த வாரமே இதை விண்வெளியில் செலுத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் மோசமான வானிலை காரணமாக இந்த முயற்சி தள்ளிப்போனது.

இந்த நிலையில், தென் மேற்கு ஜப்பானில் உள்ள உச்சிநவுரா விண்வெளி மையத்தில் இருந்து நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி காலை 8.30 மணிக்கு, சிறிய செயற்கைக்கோளுடன், சிறிய ரொக்கெட் விண்வெளியில் செலுத்தப்பட்டது.

ஆனால் சற்றும் எதிர்பாராத விதத்தில் அதன் தகவல் தொடர்பு அமைப்பு செயலற்றுப்போனது. இதையடுத்து அந்த ரொக்கெட் கடலில் போய் விழுந்தது.

இது குறித்து ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு 'ஜாக்ஸா'வின் மக்கள் தொடர்பு அதிகாரி டாக்காயுகி டொமோபீ கருத்து தெரிவிக்கையில்,

"இந்த ரொக்கெட் திட்டத்தில் பல ஜப்பானிய நிறுவனங்கள் பங்கேற்றிருந்தன. இந்த நடவடிக்கை ஒரு சிறிய படிதான். இன்னும் பல முட்டுக்கட்டைகளை நாங்கள் தாண்டிச்செல்ல வேண்டி உள்ளது. ஒருமுறை இத்தகைய ரொக்கெட்டை ஏவுவது வெற்றி கண்டுவிட்டால், ரொக்கெட் ஏவுவதற்கான செலவுகளையும் கால அளவையும் வெகுவாக குறைக்க முடியும்" என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

# போயஸ் கார்டனை தொடர்ந்து சசிகலா கைப்பற்ற போகும் இடம் எது தெரியுமா?

அ.தி.மு.க. கட்சியின் நிறுவன தலைவர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா இன்று தமிழ் நாட்டில் கொண்டாடப்படுகிறது.

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளரான சசிகலா, ஜெயலலிதா வாழ்ந்த வீடான போயஸ் கார்டனை கைப்பற்றியுள்ளார்.


அடுத்து எம்.ஜி.ஆரின் குடும்பத்தாரையும் அவர் ஆதரவாளர்களையும் தன் வசப்படுத்த இன்று ராமாவரத்தில் இருக்கும் எம்.ஜி.ஆர்.தோட்டத்தில் அவரது உருவச் சிலையை சசிகலா திறந்து வைக்கவுள்ளார்.

சசிகலா அ.தி.மு.கவின் தலைமை இடத்தை கைப்பற்றியது எம்.ஜி.ஆரின் வளர்ப்பு மகள் சுதா, அவரது தம்பி தீபன் ஆகிய குடும்ப உறுப்பினர்களுக்கு பிடிக்கவில்லை.

இவர்கள் எல்லோரையும் சமாதானப்படுத்த ராமாவரம் எம்.ஜி.ஆர்.தோட்டத்தில் 14 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட எம்.ஜி.ஆர். சிலையை புதுப்பித்து, சசிகலா திறந்து வைக்க முடிவு செய்துள்ளார்.

இதன்மூலம் போயஸ் கார்டனை கைப்பற்றிய சசிகலா குடும்பத்தினர் எம்.ஜி.ஆர். கார்டனை கைப்பற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர். (இ-7)

# அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியின் மகள்கள் இந்நாள் ஜனாதிபதியின் மகள்களுக்கு விசேட கடிதம்





(வோஷிங்டன்)

ஒபாமாவின் மகள்கள் சாஷா மற்றும் மாலியாவுக்கு, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ்ஷின் மகள்கள் பார்பரா மற்றும் ஜென்னா புஷ் ஆகிய இருவரும் உணர்வுபூர்வ கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

அதில் அமெரிக்க முன்னாள் முதல் குடிமகனின் வாரிசுகள் குழுவுக்கு இருவரையும் வரவேற்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இக்கடிதம் டைம் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் சாராம்சம் பின்வருமாறு,

"நீங்கள் குழந்தையாக இருந்து, கருணைமிக்க மற்றும் எளிமையான இளம் பெண்களாக மாறுவதை நாங்கள் கண்கூடாகக் கண்டோம். அமெரிக்க முன்னாள் முதல் குடிமகனின் வாரிசுகள் குழுவுக்கு உங்களை வரவேற்கிறோம்.

இது நீங்கள் எதிர்பார்த்திராத தருணம். ஆனால் முன்னோக்கி செல்லத்தான் வேண்டும். உங்களின் புகழ் பெற்ற, பெருமை வாய்ந்த பெற்றோரின் நிழலுக்குப் பின்னால்தான் உங்களின் வாழ்க்கைக் கதை எழுதப் படும்.

உங்களின் கடந்த 8 ஆண்டுகளின் அனுபவத்தைக் கடைசி வரை நீங்கள் சுமந்து செல்ல வேண்டி இருக்கும். (ஒபாமாவின் பதவிக்காலம் 8 ஆண்டுகள். 2008 இல் ஒபாமா பதவியேற்றபோது, ஜனாதிபதியாக இருந்த புஷ்ஷின் மகள்கள் பார்பரா மற்றும் ஜென்னா புஷ் இருவரும் இளம் பெண்ணாக வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறினர்.)

இந்த எட்டு வருடத்தில் நீங்கள் நிறைய செய்திருக்கிறீர்கள். நிறைய பார்த்திருப்பீர்கள். சாஷாவுக்கு இப்போது 15 வயது. மாலியாவுக்கு 18. கடந்த இரண்டு காலகட்டத்தின் அனுபவங்களை உங்களின் இதயத்துக்கு அருகில் பத்திரமாக வைத்திருங்கள்.

வெள்ளை மாளிகையை உங்களின் வீடாக மாற்றிய ஊழியர்களிடமும் உங்களைப் பாதுகாத்த பணியாளர்களிடமும் தொடர்பிலேயே இருங்கள்.

மாலியா ஹார்வர்ட் கல்லூரி வாழ்க்கையில் காலடி எடுத்துவைக்கவுள்ளாய். சாஷா வோஷிங்டன் உயர்நிலைப் பாடசாலையில் படிக்கிறாய். இருவரும் இந்த இளமைப் பருவத்தில் மகிழ்ச்சியாக இருங்கள்.

உங்களின் இளம் தோள்களில் உலகத்தின் பாரம் இறங்கப்போவதில்லை. உணர்வுகளை வெளிப்படுத்துங்கள். நீங்கள் யாரென உணருங்கள். தவறு செய்யுங்கள். அதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

கல்லூரி வாழ்க்கையை அனுபவியுங்கள். உலகத்துக்கே தெரியும். நாங்கள் அதைச்செய்தோம். உண்மையான மற்றும் பாதுகாப்பான நண்பர்களை அருகிலேயே வைத்திருங்கள்.

வெள்ளை மாளிகையின் அனைத்து அழுத்தங்களிலும் வாழ்ந்து பழகியிருப்பீர்கள். நீங்கள் இதுவரை சந்தித்திராத மக்களிடம் இருந்துகூட, உங்கள் பெற்றோர் மீதான கடுமையான விமர்சனங்களைக் கேட்டிருப்பீர்கள்.

உங்களை நாட்டின் முதல குடிமக்களாக ஆக்கியோர் பெற்றோர். அவர்கள் இந்த உலகத்தை மட்டும் உங்களுக்குக் காட்டவில்லை. அதைத் தந்திருக்கின்றனர். உங்களின் அடுத்த அத்தியாயத்தை இனிதே தொடங்குங்கள்".

இவ்வாறு புஷ்ஷின் மகளகள், ஒபாமாவின் மகள்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (இ-7)

# 1000 புத்தகங்கள் படித்ததால் 4 வயதில் நூலகர் ஆன சிறுமி



அமெரிக்காவில் ஜார்ஜியா மாகாணத்தில் 1000 புத்தகங்கள் படித்ததால் 4 வயதுச்சிறுமி நூலகர் ஆனாள். இதன் மூலம் உலகிலேயே மிகக் குறைந்த வயதில் நூலகரான சிறுமி என்ற பெருமையை இவள் பெற்றாள்.

அமெரிக்காவில் ஜார்ஜியா மாகாணத்தில் உள்ள செயின்ஸ்வில்லே பகுதியைச் சேர்ந்தவர் ஹலீமா. இவர் அமெரிக்க வாழ் ஆபிரிக்கர் ஆவார். இவரது மகள் பாலியா மேரி அரானா (வயது - 4).

• இவளுக்கு புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம். தனது 3 வயதில் படத்துடன் கூடிய புத்தகத்தை படிக்கத் தொடங்கினாள்.

அதைப் பார்த்த தாயார் ஹலீமா அவளுக்கு புத்தகம் படிக்கும் ஆர்வத்தை தூண்டினார். அதைத் தொடர்ந்து 4 வயதில் சுமார் 1000 புத்தகங்களை அரானா படித்து முடித்தாள்.

இதுகுறித்து அமெரிக்க நூலக கூட்டமைப்புக்கு அரானாவின் தாயார் ஹலீமா விபரமாக கடிதம் எழுதினார்.

அதைத் தொடர்ந்து நூலக கூட்டமைப்பு அரானாவை கௌரவிக்க முடிவு செய்தது.

அதையடுத்து அரானா ஒருநாள் நூலகராக பணிபுரிய அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி அமெரிக்க நூலக கூட்டமைப்பு அலுவலகத்துக்கு அழைத்து வரப்பட்ட அரானா நூலகர் இருக்கையில் அமர வைத்து கௌரவிக்கப்பட்டாள்.

இதன்மூலம் உலகிலேயே மிகக் குறைந்த வயதில் நூலகரான சிறுமி என்ற பெருமையை இவள் பெற்றாள்.

குழந்தைகளிடையே புத்தகம் படிக்கும் ஆர்வத்தை வளர்க்க எதிர்காலத்தில் இதுபோன்று சிறுவர்களை கௌரவிக்க அமெரிக்க நூலக கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. (இ-7)

# எமது வாழ்க்கை சந்தோசமாக அமைய நகைச்சுவையும் நையாண்டியும் தேவை

## பிரதமர் மோடி விசேட உரை

ஆயுதத்தின் வலிமையைவிட புன்னகை வலிமை வாய்ந்தது. நகைச்சுவை பாலங்களை உடைப்பதில்லை. உறவுப் பாலங்களை கட்டுகிறது. எமது வாழ்க்கை, சந்தோசமாக அமைய நகைச்சுவையும் நையாண்டியும் தேவை என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

'துக்ளக்' பத்திரிகையின் 47ஆவது ஆண்டு விழா சென்னையில் கடந்த சனிக்கிழமை நடந்தது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, டில்லியில் இருந்து காணொலி காட்சி மூலம் பேசினார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

இந்த விழாவில் நான் நேரில் கலந்துகொள்ள வேண்டும் என்றுதான் விரும்பினேன். ஆனால் வேலைபளு என்னை அனுமதிக்கவில்லை. 'துக்ளக்' பத்திரிகையின் 47ஆவது ஆண்டு விழாவில் நான் என் அன்பு நண்பர் சோ.ராமசாமிக்கு அஞ்சலி செலுத்துகிறேன்.


சோ மறைவால் அனைவரும் நமது நண்பரை இழந்திருக்கிறோம். நான் அவரை 40 ஆண்டுகளாக அறிவேன். எனவே அவரது மறைவு, எனக்கு தனிப்பட்ட இழப்பு.

நான் வாழ்வில் சந்தித்த பன்முக திறன் படைத்த ஆற்றலாளர்களில் சோவும் ஒருவர். துக்ளக்கையும், சோவையும் ஒருவரை விட்டு ஒருவரைப் பிரித்துப் பார்க்க முடியாது. இந்தியாவின் அரசியல் வரலாற்றை யாரேனும் எழுத வந்தால், அதில் அவர் சோவையும், அவரது விமர்சனத்தையும் விட்டு விட்டு எழுத முடியாது. அனைத்து பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக துக்ளக்கை அவர் ஒரு ஆயுதமாக பயன்படுத்தினார். அவர் தூய்மையான, ஊழல் இல்லாத அரசியல் அமைப்பினை உருவாக்குவதற்காக போராடினார். அந்தப் போராட்டத்தில் அவர் யாரையும் விட்டுவிடவில்லை.

தன்னோடு நீண்டகாலமாக நடித்தவர்களையும்கூட அவர் விமர்சித்தார். அவரோடு நீண்டகாலமாக நட்பு பாராட்டியவர்களையும் விமர்சித்தார். அவரை வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டவர்களையும் விமர்சித்தார். அவர் யார் என்று பார்க்க வில்லை. பிரச்சினை என்ன என்றுதான் பார்த்தார். அவருடைய செய்தியின் மையமாக தேசம் தான் இருந்தது.

அவர் யாரையெல்லாம் விமர்சித்தாரோ, அவர்களையும் அவரது நையாண்டி நேசிக்க வைத்தது. அது இறைவன் அவருக்கு தந்த பரிசு.

எனக்கு நினைவில் இருக்கிறது. ஒருமுறை அவர் மீது கோபம் கொண்டவர் கள், சோ மீது முட்டைகளை வீச ஆரம்பித்தார்கள். அதைக கண்ட சோ, "ஐயா, என்னை நீங்கள் ஒரு ஆம்லெட்டாக போட முடியும் என்கிறபோது, எதற்காக பச்சை முட்டைகளை என்மீது வீசுகிறீர்கள்?" என கேட்டார். முட்டைகளை வீசியவர்கள், சிரிக்கத் தொடங்கினார்கள்.



என்னைப் பொறுத்த மட்டில், சோவின் சிந்தனை, பங்களிப்புகள் தமிழோடும், தமிழ் மக்களோடும் குறுக்கி விடக்கூடியது அல்ல. அவர் இந்தியாவில் பல்வேறு ஊடகவியலாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பல தலைமுறைகளாக ஊக்க சக்தியாக திகழ்ந்தவர்.

துக்ளக் மூலம் சோ ஆட்சியாளர்களுக்கும், மக்களுக்கும் இடையே பாலமாக திகழ்ந்தார். சோ நையாண்டி கலை, நகைச்சுவையில் வல்லவராக திகழ்ந்தார்.

நம் எல்லோருக்கும் இன்னும் நையாண்டி தேவை. நகைச்சுவை தேவை. நகைச்சுவை, நம் அன்றாட வாழ்வில் சந்தோசத்தைக் கொணடு வந்து சேர்க்கிறது. நகைச்சுவைதான் நல்ல நிவாரணி.

துஷ்பிரயோகத்தின் வலிமையை விட, ஆயுதத்தின் வலிமையை விட புன்னகை வலிமை வாய்ந்தது. சிரிப்பு வலிமை வாய்ந்தது. நகைச்சுவை பாலங்களை உடைப்பதில்லை. பாலங்களை கட்டுகிறது. இன்றைக்கு பாலங்களைகட்ட வேண்டிய தேவை உள்ளது. மக்களிடையே பாலங்கள் கட்ட வேண்டும். சமூகத்தினர் இடையே பாலங்கள் கட்ட வேண்டும்.

நகைச்சுவை மனிதர்களின படைப்பாற்றலை வெளியே கொண்டு வருகிறது. இன்றைக்கு ஒரு பேச்சு அல்லது ஒரு நிகழ்ச்சி எத்தனையோ மீம்ஸ்களை (கிண்டல்களை), பார்வர் டுகளை (பலருக்கும் அனுப்பு வதை) உருவாக்குகிற ஒரு உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்த விழாவில் சோவின் குரலில் ஸ்ரீமத் பகவத் கீதையில் இருந்து சுலோகங்களை சொல்வதை கேட்பதை பாரம் பரியமாக நீங்கள் கொண்டிருப்பீர்கள். சோவுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் நான் ஒரு சுலோகத்தை சொல்லி நிறைவு செய்ய விரும்புகிறேன்.

நிலைப்பேறு என்பது ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு நகர்வதல்ல. அது, ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு நகரக்கூடியது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாராய ஆலை நடத்துபவர் முதலமைச்சராகக்கூடாது

## சட்டக்கல்லூரி மாணவி சசிகலாவுக்கு எதிர்ப்பு



சட்டக்கல்லூரி மாணவி நந்தினி தமிழகத்தில் மிக பிரபலமானவர். காரணம் இவர் இளம் வயதிலேயே அநீதிக்கு எதிராக பல போராட்டங்களை துணிச்சலுடன் நடத்தி வருபவர்.

அதிலும் முக்கியமாக, ஜெயலலிதா முதல்வராக இருக்கும் போது தமிழகத்தில் மதுக்கடைகளை மூட வேண்டும் என்றும் பொதுமக்களை குடி நோயாளிகள் ஆக்கும் இந்த மதுவை அரசே நடத்துவது கேவலம் என தன தந்தையுடன் போராடி, பல முறை சிறை சென்றுள்ளார்.

தற்போது தனது படிப்பை முடித்துள்ள நந்தினி பகத்சிங் புரட்சிகர இயக்கம் என்னும் அமைப்பை தொடங்கியுளளார்.

அவர் கூறுகையில், தற்போது அ.தி.மு.கவின் பொதுச செயலாளராக இருக்கும் சசிகலா அடுத்து தமிழகத்தின் முதல்வராக முயற்சித்து வருகிறார்.

இது நடக்கக் கூடாது. தமிழகத்தில் அதிக அளவில் மது விற்பனை ஆவது மிடாஸ் மது நிறுவனத்திடமிருந்து தான். இதை நடத்துவது சசிகலாவின் உறவினர்கள் என்பது ஊரறிந்த விடயமாகும்.

மது ஆலை மூலம் இவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது.

இப்படி மது ஆலை நடத்துபவர்கள் தமிழகத்தின் முதல்வராக எக்காலத்திலும் வரக்கூடாது. யார் ஆட்சிக்கு வந்தாலும் தனது மது எதிர்ப்புப் போராட்டம் தொடரும் என நந்தினி தெரிவித்தார். (இ-7)

# சந்திரபாபு நாயுடு பிறந்த மாவட்டத்தில் தடையை மீறி ஜல்லிக்கட்டு நடந்தது





ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு பிறந்த சித்தூர் மாவட்டத்துக்குட்பட்ட சில கிராமங்களில் உச்சநீதிமன்றின் தடையை மீறி நேற்று முன்தினம் ஜல்லிக்கட்டு நடந்தது.

ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு தனது சொந்த ஊரான சித்தூர் மாவட்டத்தில் உள்ள நாரவாரி பள்ளி கிராமத்துக்கு சங்கராந்தி பண்டிகையை கொண்டாடுவதற்காக தனது குடும்பத்தாருடன் நேற்று முன்தினம் வந்திருந்தார்.

இந்நிலையில், முதலமைச்சரின் பூர்வீக வீட்டின் அருகாமையில் உள்ள புல்லையாகரிப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் நேற்று முன்தினம் ஜல்லிக்கட்டு மற்றும் மஞ்சு விரட்டு போட்டிகள் நடைபெற்றன.

இதேபோல், அருகாமையில் உள்ள சுற்றுப்பட்டு கிராமங்களிலும் சுமார் 100 காளைகள் ஜல்லிக்கட்டு மற்றும் மஞ்சு விரட்டு போட்டிகளில் கலந்து கொண்டன. இந்தப் போட்டிகளை காண ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதேபோல், ஆந்திர மாநிலத்தில் உள்ள சித்தூரை ஒட்டியுள்ள திருப்பத்தூர் அருகாமையில் உள்ள கல்நராசாம்பட்டி பகுதியில் 'எருது விடும் விழா' நடைபெற்றது. முன்னதாக இந்த நிகழ்ச்சிக்கு பொலிஸார் தடையை விதித்திருந்தனர். இந்தத் தடையை பொருட்படுத்தாமல் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எருது விடும் விழாவில் 50இற்கும் அதிகமான காளைகள் பங்கேற்றன. (இ-7)

# இளைஞர் சமுதாயத்துக்கு தி.மு.க. துணை நிற்கும்

## மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

ஜல்லிக்கட்டு உரிமையை மீட்டு எடுக்க இளைஞர் சமுதாயத்துக்கு தி.மு.க. துணை நிற்கும் என்று அதன் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். தி.மு.க. செயல் தலைவரும் தமிழக எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸடாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழர்களின் பொங்கல் திருநாளை முன்னிட்டு ஜல்லிக்கட்டு நடத்துவதற்காக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இளைஞர்களுக்கு மிகப்பெரிய ஏமாற்ற த்தை அளித்துள்ள அ.தி.மு.க. அரசுக்கும் மத்திய அரசுக்கும் எனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

2014 ஆம் ஆண்டு மே மாதமே ஜல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்று தடை விதித்தும், மூன்று வருடங்களாக கடிதம் எழுதுவது மட்டுமே "நிர்வாகம்" என்ற ரீதியில் அ.தி.மு.க. அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவில்லை என்பதோடு, ஆங்காங்கே தங்களின் பாரம்பரிய மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்காகப் போராடிய மாணவர்களையும், இளைஞர்களையும் கைது செய்தும் தடியடி நடத்தியும் அ.தி.மு.க. அரசு தமிழர்களுக்கு துரோகம் செய்திருக்கிறது.

எப்பாடுபட்டாவது தங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற ஒரே நோக்கத்துடன் செயற்படும் அ.தி.மு.க. அரசு, மத்திய பா.ஜ.க. அரசின் எடுபிடியாக மட்டுமே மனமுவந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. மாநில உரிமைகளுக்காகவோ, தமிழர்களின் உரிமைக்காகவோ ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பதற்கு அ.தி.மு.க. அரசு தயாராக இல்லை என்பது ஜல்லிக்கட்டு பிரச்சினையில் வெளிப்படையாகவே அரங்கத்திற்கு வந்து விட்டது.

ஊழலில் திளைக்கும் அ.தி.மு.க. அரசு, மத்திய அரசிடம் வலுவாக கோரிக்கை வைக்கும் பலத்தை இழந்து, ஜல்லிக்கட்டு உள்ளிட்ட தமிழக நலன்களை எல்லாம் கூச்சமின்றி தாரை வார்த்து விட்டு தடுமாறி நிற்கிறது என அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். (இ-7)

# இயற்கை அனர்த்தங்களால் 2016 இல் 1,600 பேர் பலி!

இந்தியாவில், கடந்த 2016 ஆம் ஆண்டில் மட்டும் வெயில், மழை, குளிர் போன்ற இயற்கை அனர்த்தங்களால் 1,600 பேர் உயிரிழந்துவிட்டதாக, அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய வானியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைப் பொறுத்தவரையில் இந்திய மக்களுக்குச் சோகமான காலம் என்றே கூறலாம். அந்த அளவுக்கு, கனமழை, சுட்டெரிக்கும் வெயில், அனல் காற்று, வறட்சி, குளிர் மற்றும் இடி, மின்னல் போன்றவற்றால் பொதுமக்கள் அதிக பாதிப்பை சந்தித்துள்ளனர்.

நாட்டிலேயே அதிகபட்சமாக, இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பலோடி கிராமத்தில் 51 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. இதே போன்று டில்லி, உத்தரகாண்ட், காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் கடும் குளிர் பொதுமக்களை வாட்டி வதைத்தது.

ஒடிசா, ஆந்திரா, கொல்கத்தா போன்ற மாநிலங்களில் இடி, மின்னல் காரணமாக பொதுமக்கள் பெரும் அவதியுற நேரிட்டது. தமிழகம், ஆந்திரா, பீகார் போன்ற பகுதிகளில் புயல், கன மழை, வெள்ளப்பெருக்கும் மக்களின் உயிரைப்பறித்தது.

இதன்படி, 2016 ஆம் ஆண்டின் முடிவில் இந்திய அளவில் மொத்தம் 1,600 பேர் இத்தகைய மோசமான வானிலை காரணமாக உயிரை பறிகொடுத்துள்ளனர்.

இவர்களில், அனல் காற்று, வெயில் தாங்காமல் 700 பேரும் இடி, மின்னல் தாக்கி 415 பேரும் பலியாகியுள்ளனர். கனமழை, புயல் போன்றவை காரணமாக 475 பேர் உயிரிழந்துள்ளனர். 50 பேர் கடுங்குளிரால் உயிரைப் பறிகொடுத்தும் உள்ளனர்.

பீகார், குஜராத், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில்தான் அதிகபட்ச உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் மட்டும் மோசமான வானிலை காரணமாக 552 பேர் பலியாகியுள்ளனர்.

குறிப்பாக, சென்னையை பொறுத்தவரை வர்தா புயல் காரணமாக 18 பேர் உயிரிழந்துள்ளனர். (இ-7)

# பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர்.

*"தாய் மேல் ஆணை தமிழ் மேல் ஆணை*
*குருடர்கள் கண்ணை திறந்து வைப்பேன்*
*தனியானாலும் தலை போனாலும்*
*தீமைகள் நடப்பதை தடுத்து நிற்பேன்*

*இருட்டினில் வாழும் இதயங்களே*
*கொஞ்சம் வெளிச்சத்தில் வாருங்கள்*
*நல்லவர் உலகம் எப்படி இருக்கும்*
*என்பதை பாருங்கள்*
*எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான்*
*என்பது கேள்வி இல்லை -*
*அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை உணர்ந்தால்*
*வாழ்க்கையில் தோல்வியில்லை*
*வாழ்க்கையில் தோல்வியில்லை"*



மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 100 ஆறாவது பிறந்தநாள் இன்றாகும். அதனை முன்னிட்டு இக் கட்டுரை இன்று பிரசுரிக்கப்படுகிறது.

நடிகராகவும் சிறந்த அரசியல் தலைவராகவும் எம்.ஜி.ஆர். தமிழகத்தில் அறியப்பட்டாலும் அவருடைய வள்ளல் தன்மையும் எளிய மக்களுடன் பழகும் மனப்பாங்கும் தான் தற்போது வரை அவரை நம் நினைவில் நிறுத்தியுள்ளது.

எம்.ஜி.ஆரின வள்ளல் தன்மையை பார்த்த அருட்திரு. கிருபானந்த வாரியார்தான் அவருக்கு 'பொன்மனச் செம்மல்' என்ற பட்டத்தை கொடுத்தவர். அதற்கேற்றாற போல் தன் கையில் இருக்கும் பணம் எல்லாவற்றையும் கொடுத்து, கொடுத்தே சிவந்தகரம் அவருடையது.

சினிமாவில் பெரிய இடத்திற்கு வருவதற்கு முன்னால் கூட, அவரின் வள்ளல் பண்பு தொடர்ந்து கொண்டேதான் இருந்தது.

குறிப்பாக அந்தக் காலத்தில் ஓரளவுக்கு பெரிய பணமாக பார்க்கப்படும் பத்து ரூபாய் நோட்டுத் தாள்களை தனது கைச் சட்டையின் மடிப்பில் எம்.ஜி. ஆர். வைத்துக் கொள்வாராம். எளியவர்கள், ஏழைகள் யாரை யாவது அவர் பார்த்து விட்டால் உடனடியாக பத்து ரூபாய் தாள்களில் ஒன்றை கொடுத்துவிட்டு வந்து விடுவாராம்.

தனது வாழ்நாள் முழுவதும் எம்.ஜி.ஆர். எவ்வளவோ பேருக்கு உதவிகள் செய்திருக்கிறார். ஆனால் அது குறித்து அவர் வெளிக்காட்டிக் கொண்டதில்லை. அப்படி ஒருவேளை அவர் உதவி செய்த நபர்களை கணக்கில் கொண்டால், அது பல்லாயிரத்தை தாண்டும் என்கின்றனர் எம்.ஜி. ஆர். ரசிகர்கள்.

தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்ற எம்.ஜி.ஆர். மறைந்து 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆண்டுகள் உருண்டோடினாலும் எம்.ஜி.ஆர். என்ற ஆளுமை என்றும் நம் மனதில் இருந்து அகலப் போவதில்லை.

இந்த சம்பவம் நடந்து பல வருடமாகி விட்டது. ஆனால் இன்றளவும் அதை எளிமையாக கடந்து விட முடியாது. அந்தளவு தமிழக அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவம் அது.

திரைப்படங்களில் கதாநாயகனாக வருபவர்தான் வில்லனைச் சுடுவார். ஆனால் வில்லன் நடிகராக திகழ்ந்தவர் கதாநாயகனை சுட்ட சம்பவம் தான் அது. அதுவும் நிஜத்தில். அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்பவராகவும், ஏழைகளின் தோழனாகவும், நல்லதை மட்டுமே செய்பவராகவும் திரைப்படங்களில் நடித்ததன் மூலம் உலகத் தமிழ் மக்களின் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருந்தவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அரசியலில் காங்கிரசுக்கு மாற்றாக உருவெடுத்திருந்த தி.மு.கவின் செல்லப்பிள்ளையாகவும் திகழ்ந்தவர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். மக்கள் மனங்களிலும் அரசியல் அரங்கிலும் அசைக்க முடியாத செல்வாக்குடன் திகழ்ந்த எம்.ஜி.ஆரை ஒரு தோட்டாவின் மூலம் சாய்த்த சம்பவம்தான் அது. எம்.ஜி.ஆரை சுட்டவர் எம்.ஆர்.ராதா.

"எம்.ஜி.ஆரை சுட்டுட்டேன்னு ஆளாளுக்கு கோஷம் போடறாங்க. நானும் எம்.ஜி.ஆரும் ஐம்பது வருடமாக நண்பர்களா இருக்கோம். எங்களுக்குள்ள சின்னக் கோபம். சண்டை போட்டுட்டோம். அந்த சமயத்துல கம்பு இருந்திருந்தா கம்புச் சண்டை போட்டிருப்போம். கத்தி இருந்தா கத்திச்சண்டை போட்டிருப்போ. துப்பாக்கிதான் இருந்துச்சு. சுட்டுக்கிட்டோம்" என சாதாரணமாக பதிலளித்தார்.

1967ஆம் ஆண்டு நடக்க இருந்த பொதுத் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன் நடந்தது அந்த அதிர்ச்சிச்சம்பவம். எம்.ஜி.ஆரும், எம்.ஆர்.ராதாவும் திரை உலகில் கொடி கட்டிப் பறந்த காலம் அது. "பெற்றால்தான் பிள்ளையா" என்ற படத்துக்காக பட அதிபர் வாசு நடிகர் எம்.ஆர்.ராதாவிடம் ரூ.1 இலட்சம் கடனாக பெற்றிருந்தார். படம் வெளியான பின் அந்த பணத்தை திருப்பி கொடுப்பது எனவும், அதற்கு எம்.ஜி.ஆர். பொறுப்பேற்று இருந்ததாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக பேச ஜனவரி 12 ஆம் திகதி ராமாவரம் தோட்டத்தில் உள்ள எம்.ஜி.ஆரின் வீட்டுக்கு எம்.ஆர்.ராதா சென்றிருந்தார். உடன் பட அதிபர் வாசுவும் சென்றிருந்தார். இருவரும் எம்.ஜி.ஆரை சந்தித்துப் பேசி கொண்டிருக்கும் போது எம்.ஜி.ஆருக்கும் எம்.ஆர்.ராதாவுக்கும் இடையே தகராறு எழுந்துள்ளது. அந்த நேரத்தில் ராதா தன் மடியில் வைத்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்து எம்.ஜி.ஆரை நோக்கி சுட்டார். இதனை சற்றும் எதிர்பார்க்காத எம்.ஜி.ஆர். சமயோசிதமாக குனிய துப்பாக்கியில் இருந்து வெளியான தோட்டா எம்.ஜி.ஆரின் இடது பக்க காதின் அருகாமையில் கன்னத்தில் பாய்ந்தது. இதனை தொடர்ந்து எம்.ஆர்.ராதா துப்பாக்கியை தன் தலையில் வைத்து இயக்க அதிலிருந்து வெளியான தோட்டா ராதாவின் நெற்றியில் பாய்ந்தது.

துப்பாக்கியால் சுடப்பட்ட எம்.ஜி.ஆர். ராயப்பேட்டையில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் சென்னை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ராதாவும் அங்கே அனுமதிக்கப்பட்டார். ராதாவின் நெற்றியில் பாய்ந்த தோட்டா அகற்றப்பட்டது. ஆனால் எம்.ஜி.ஆர. கன்னத்தில் பாய்ந்த தோட்டா அவரது கழுத்தில் 3 முக்கிய நரம்புகளுக்கு இடையே பதிந்திருந்தது. அதனை அகற்றினால் எம்.ஜி.ஆரின் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம் என வைத்தியர்கள் கருதினர். இதனால் தோட்டாவை அகற்றாமலேயே தையல் போடப்பட்டது.

இந்த நிலையில் நடக்க இருந்த தேர்தலில் பறங்கிமலை சட்டமன்ற தொகுதியில் தி.மு.க வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார் எம்.ஜி.ஆர். அவரால் தேர்தல் பிரசாரத்துக்குச் செல்ல முடியாத நிலையில் அவர் வைத்தியசாலையில் கழுத்தில் பெரிய கட்டுடன் இருக்கும் படங்கள் போஸ்டர்களாக ஒட்டப்பட்டன. தேர்தல் பிரசாரத்துக்கு தொகுதிக்குச் செல்லாமலே தன்னை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ரகுபதியை 28 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரும் எம்.ஆர்.ராதாவும் குணமடைந்த நிலையில் ராதா மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்தது. எம்.ஜி.ஆரின் சாட்சியத்தை கேட்டறிந்த சைதாப்பேட்டை நீதிமன்றம் எம்.ஆர்.ராதாவுக்கு 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். துப்பாக்கி தோட்டாவிடம் இருந்து உயிர் தப்பியது மட்டுமல்ல தேர்தலில் படுத்து கொண்டே ஜெயிக்கவும் செய்தார்.

அதனால்தான் காலத்தை வென்றவன் எனவும், காவியமானவன் எனவும் அழைக்கப்பட்டார் எம்.ஜி.ஆர்.

# கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய திட்டம்

(கொழும்பு)

கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுததுவதற்கு இலங்கை அரசாங்கம் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

கொழும்பு நகரம் மற்றும் நாடாளுமன்றத்தை அண்டிய பகுதிகளில் அண்மையில் அதிகரித்துள்ள ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளால் வாகனப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்படுகின்றன.

இந்த நிலையிலேயே, இத்தகைய போராட்டங்களை கட்டுப்படுத்துவதற்காக, ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான இரண்டு இடங்களை வர்த்தமானி மூலம் அறிவிக்க சட்டம், ஒழுங்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப்பை உடனடியாக வெளியிடுமாறு அமைச்சர் சாகல ரத்நாயக்க சட்டம் ,ஒழுங்கு அமைச்சின் செயலர் ஜெகத் ஜெயவீரவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான பின்னர், குறிப்பிட்ட இடங்களில் மாத்திரமே எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விவகாரம் குறித்து அலரி மாளிகையில் பிரதமர் கடந்த 13 ஆம் திகதி பொலிஸ் அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின் போதும் ஆராயப்பட்டுள்ளது. (இ-3)

# நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகார குறைப்பு அவசியம்

## அஜித் பி.பெரேரா வலியுறுத்து



**(கொழும்பு)**

**நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு கூடிய அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாகவுள்ளதாக பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட வேண்டும் என்பது இந்த அரசாங்கம் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியாகும். அதனை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் பிரதான பணி எனவும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# 40 ஆண்டுகளில் இல்லாத மோசமான வரட்சியின் பிடிக்குள் இலங்கை

இலங்கை 40 ஆண்டுகளில் இல்லாத மோசமான வரட்சி ஒன்றை எதிர்கொண்டுள்ளதாக அரசாங்கம் எச்சரித்துள்ளதுடன் இந்த வரட்சியை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களையும் மேற்கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு இலங்கையில் சராசரி மழையளவில் 70 வீதமே பெய்திருந்தது. இதனால் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

தற்போது நீர்த்தேக்கங்களில் உள்ள நீர், இரண்டு மாதங்களுக்கு மாத்திரமே குடிநீர்த் தேவைக்கு பயன்படுத்த முடியும்.

இதனால் நாட்டின் மொத்த மின்சார உற்பத்தியில் 36 வீத பங்களிப்பை வழங்கும் நீர்மின உற்பத்தி கடுமையான சரிவைச் சந்திக்கவுள்ளது.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் தயாராகியுள்ளது.

அரச பணியகங்களில் குளிரூட்டிகளை 26 பாகை செல்சியஸுக்கு கீழ் குறைக்க வேண்டாம் என்று ஜனாதிபதி சுற்றுஅறிக்கை ஒன்றை அனுப்பவுள்ளார் என்று பிரதி அமைசசர் அஜித் பி.பெரேரா தெரிவித் தார். இதன் மூலம் மின்சாரத்தை ஓரளவு சேமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் மின்சார பயன்பாடு தொடர்பான பல்வேறு கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளன.

இந்த வரட்சியினால் 13 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயத்தை நம்பியுள்ள இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

40 ஆண்டுகளில் இல்லாத இந்த மோசமான வரட்சியை எதிர்கொள்வதற்கான செயலணி ஒன்றை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார்.

அதேவேளை வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், உதவி மற்றும் நிவாரணப் பணிகளில் முப்படைகளையும் ஈடுபடுத்தவும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3)

# அரசிற்கு எதிராக தொடர்ந்து போராட்டங்கள் நடத்தப்படும்

## வாசுதேவ எம்.பி. தெரிவிப்பு



அரசுக்கு எதிராக தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தெற்கு கைத்தொழில் வலயத்தை அமைப்பதற்கு காணி சுவீகரித்தல் உட்பட தேசிய அரசின் பொருளாதாரக் கொள்கை திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் ஜனநாயக இடதுசாரி முன்னணி இரத்தினபுரி எஹலியகொடவில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களுக்கு எதிரான திட்டங்களையே அரசு, முன்னெடுத்து வருகின்றது. இதற்கு எதிராக ஜனநாயக வழியில் நடத்தப்படும் போராட்டங்களும் திட்டமிட்ட அடிப்படையில் முடக்கப்படுகின்றன.

எது எப்படியிருந்தபோதிலும மக்கள்போராட்டங்களை கைவிடமாட்டோம். அது தொடர்ந்தும் நடைபெறும் எனவும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## கேள்விப்பட்டது உண்மையா?

நமக்குத் தெரிந்தவர்கள்–வேண்டியவர்கள் வீட்டில் நடக்கக்கூடாதது நடந்துவிட்டால் அதை நாம் கேள்விப்பட்ட விதமும் அரை குறையாக இருந்தால் அதை விசாரிக்கும் விதம் இதமாகவும் பதமாகவும் இருக்க வேண்டும்.

நுழைந்தவுடன் என்னங்க உங்க பொண்ணு இப்படிப் பண்ணிடுச்சு ? என்று சில பேர் ஆரம்பிக்கிறார்கள், ஆனாலும் உங்க பொண்ணு இப்படி உங்களை மோசம் பண்ணியிருக்கக் கூடாதுங்க என்று சிலர் தீர்ப்புக் கூறிப் பேச்சைத் தொடங்குகிறார்கள். தவறு.

சில வீடுகளில் தற்கொலை, திருட்டு, மரணம் வரை போகாத வீதி விபத்து, தீ விபத்து போன்றவை நடந்துவிடுகின்றன.

இத்தகைய நேரங்களில் தம்முடைய துன்பத்தில் யாரும் பங்கு கொள்ள முன்வர வில்லையே என்ற ஏக்கத்தைவிட யார் முகத்தையும் பார்க்காமல் இருப்பதே உத்தமம் என்று பாதிக்கப்பட்டவர்கள் நினைக்கிறார்கள்.

சம்பந்தப்பட்டவர்களின் மனோநிலை இப்படி இருக்க அவர்களது துன்பத்தின் வீரியத்தைக் குறைக்க நினைக்காமல் , சொல்லக்கூடாத வார்த்தைகளையெல்லாம் கடப்பாரைப் போல் உள்ளே கொடுத்து நெம்பி வேதனையை வெளியே கிளறும் வேலையைச் சிலர் செய்கிறார்கள்.

இது மகா பாவம்! அறிந்து செய்தாலும் சரி, அறியாமல் செய்தாலும் சரி.

இப்படி வலியப் போய்க் கேட்பதைவிட அதைக் கேட்காமல் இருப்பதே உத்தமம்.

இந்த மாதிரியான சம்பவங்களின் போது செய்தியை உறுதி செய்து கொள்ளவும், அவர்களது அப்போதைய மனநிலை என்ன என்பதை அறிந்து கொள்ளவும் ,முதல் கேள்வியாகக் கேள்விப்பட்டது உண்மையா? என்கிற தொனியில் பேச்சை ஆரம்பிப்பது நல்லது. நடக்கக்கூடாதது நடந்து விட்டது என்றோ, இப்படி ஆகியிருக்க வேண்டாம் என்றோ கூட விடயத்தைத் தொடங்கி , அதைக் கிரகித்து, சோகத்தைக் குறைத்து அவர்களது துன்பத்தில் ஒரு சதவிகிதத்தையேனும் பெற முயல வேண்டும். நம் வார்த்தைகள் புண்பட்ட மனங்களுக்கு ஒத்தடங்களாக வேண்டும்.

அணுகுமுறை மாறினால் வார்த்தைகள் தவறுதலாக வந்து விழுந்தால், இப்படி நடந்ததில் இந்த ஆளுக்கு குரூர சந்தோசம் போலும்! என்று சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள இடமாகிவிடும்.

இதைவிட வேறு வினையே வேண்டாம்!

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






## 'ஆடம்பரத் திருமணமும்... தேர்தலில் படுதோல்வியும்!'

"எளிமை, துணிவு, நேர்மை, உழைப்பு போன்ற பண்புகளை, மற்றவர்களிடம் எதிர்பார்ப்பதைவிட மிகக் கூடுதலான அளவில் அமைச்சர்களிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கிறார்கள்" என்றார் காந்தி. இதைச் சொன்னது இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்த அடுத்த ஆண்டு. இதை, அவர் சொல்லி ஏறத்தாழ ஆறு தசாப்தங்கள் ஆகின்றன. மக்களின் எதிர்பார்ப்பும் அப்படியேதான் இருக்கிறது. ஆனால், அதை நிறைவேற்றத்தான் அமைச்சர்கள் யாரும் இல்லை. நம்மை நாமே நொந்து கொள்ள வேண்டியதுதான். சரி... நாம் விடயத்துக்கு வருவோம். 1996ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்தது. ஏன், அந்தத் தேர்தலில் பர்கூரில் ஜெயலலிதாவே... சுகவனத்திடம் தோற்றுப்போனார். அந்தத் தோல்விக்குப்பின் ஜெயலலிதா, 'இந்தியா ருடே'வுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறாகக் கூறினார். "ஆம். நான் என் வாழ்வில் செய்த மிகப் பெரிய தவறு... சுதாகரன் திருமணத்தை அவ்வளவு ஆடம்பரமாக நடத்தியது." முதன்முதலில் பொதுவெளியில் ஜெயலலிதாவே ஒப்புக் கொண்ட தவறு, அது. அப்படியென்றால், அந்தத் திருமணம் எவ்வளவு ஆடம்பரமாக நடந்திருக்க வேண்டும்?

**'ஆடம்பரத் திருமணம்!'**

திடீரென ஒருநாள் ஜெயலலிதா, 28 வயது சுதாகரனை தன் வளர்ப்பு மகனாகத் தத்தெடுத்தார். சுதாகரன் வேறு யாரும் இல்லை... ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி (ஆம், ஜெயலலிதா அப்படித்தான் குறிப்பிட்டார்) சசிகலாவின் அக்கா மகன்தான். தத்தெடுத்த சில நாட்களிலேயே அவருக்கு மிக ஆடம்பரமாகத் திருமணம் நடத்தினார். மணப்பெண், மறைந்த நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் பேத்தி.

இப்போது நாம் எல்லாம் ஜனார்த்தன ரெட்டி மகள் திருமணத்தைப் பற்றிப் பெரிதாகப் பேசுகிறோம்தானே... ரூ.6 கோடி செலவில் எல்.சி.டி. வடிவில் திருமண அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டது. 30 ஆயிரம் விருந்தினர்கள் அழைக்கப்பட்டார்கள். 36 ஏக்கர் பரப்பளவில் விஜயநகரப் பேரரசின் அரண்மனை போன்ற பிரமாண்ட செட் போடப்பட்டது. ஒரு கோடி ரூபாய் மதிப்பில் ஆடைகள் எடுக்கப்பட்டது என்று... இதே போல்தான் 1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற இந்தத் திருமணம் குறித்துப் பெரிதாகப் பேசப்பட்டது.

70,000 சதுர அடி பரப்பளவில் திரைப்பட கலை இயக்குநர் தோட்டா தரணியைக் கொண்டு பந்தல் போடப்பட்டது. ஒரே சமயத்தில், அங்கு 25,000 பேர் அமர்ந்து உணவு அருந்துவதற்கு ஏற்றாற்போல் அரங்கு அமைக்கப்பட்டது. வெளியூர்களிலிருந்து வரும் விருந்தினர்கள் தங்குவதற்காக சென்னையில் மட்டும் வெவ்வேறு ஹோட்டல்களில் 1,000 அறைகள் எடுக்கப்பட்டன... திருமணத்துக்கு வந்தவர்களுக்குக் கொடுப்பதற்காக 2 இலட்சம் தாம்பூலப் பைகள் வாங்கப்பட்டன. இவை மட்டும் அல்ல... ஏ.ஆர்.ரகுமானின் இசைக் கச்சேரி, வாணவேடிக்கை என தமிழகமே அதுவரை கண்டிராத திருமணம். இல்லை... இல்லை... காண விரும்பாத திருமணம்.

திருமண ஊர்வலத்தில் ஜெயலலிதாவும், சசிகலாவும் ஊர்வல வண்டிக்கு முன்னால், ஒட்டியாணம், வளையல்கள் என தலை முதல் கால்வரை நகைகளால் அலங்கரிக்கப்பட்டுச் செல்ல... இவர்களுக்கு முன்னால், தேவாரம் பாதுகாப்பு அளித்தபடியே சென்றுகொண்டிருந்தார். ஆம், மொத்த அரசு நிர்வாகமும், இந்தத் திருமணத்துக்காக முடக்கி விடப்பட்டிருந்தது. ரோட்டோர மின்சாரக் கம்பத்திலிருந்து மின்சாரம் எடுக்கப்பட்டு மின் விளக்குகளுக்குப் பாய்ச்சப்பட்டது. இன்னொரு பக்கம் அதே நன்னாளில் மின்சாரம் இல்லாமல், சென்னையின் சில பகுதிகள் இருளில் மூழ்கி இருந்தன.

அந்தத் திருமணத்தை, சசிகலா குடும்பத்தால் நியமிக்கப்பட்ட புகைபடக்காரர்கள் மட்டும் பதிவு செய்யவில்லை. தி.மு.க. புகைப்படக்காரர்களும் திருமணப்பொழுதின் ஒவ்வொரு கணத்தையும் படம் பிடித்துக் கொண்டிருந்தார் கள். ஆம், அதில் எடுக்கப்பட்ட புகைப் படங்கள்தான், தி.மு.கவின் பிரசார ஆயுதமானது.

**'என் சம்பந்தம் இல்லாமல் என்னைத் தத்தெடுத்தார்கள்!'**

1996ஆம் ஆண்டு தேர்தலில், அந்தத் திருமணத்தில் எடுக்கப்பட்ட படங்களைக்கொண்டு தி.மு.க வின் சுவரொட்டி வடிவமைக்கப்பட்டது. ஒரு ரூபாய் சம்பளம் வாங்குபவருக்கு... ஒரு கோடி ரூபாய் செலவில் திருமணம் நடத்த எங்கிருந்து பணம் வந்தது என்று அந்தச் சுவரொட்டிகள் கேள்வி எழுப்பின அது, உண்மையில் மக்கள் மத்தியில் தாக்கத்தை உண்டாக்கியது. அது மட்டும் அல்ல... அந்தத் தேர்தலில் தி.மு.க. - த.மா.கா அமைத்த கூட்டணி அதற்கு ஆதரவாக நடிகர் ரஜினிகாந்த் குரல்கொடுத்தது என எல்லாம் சேர்த்து... அந்தத் தேர்தலில் அ.தி.மு.கவை அதலபாதாளத்தில் தள்ளியது. இந்தக் காலகட்டத்தில் தான் ஜெயலலிதா காவிரிப் பிரச்சினைக்காக மூன்று நாடகள் உண்ணாவிரதம் இருந்தார். ஆனால், இது எதுவும் முதன்மை பெறவில்லை. அந்தத் திருமணம், அவர் எடுத்த சில நல்ல நடவடிக்கைளையும் பின்னுக்குத் தள்ளியது. 1991 தேர்தலில், பர்கூர் தொகுதிக்கு பிரசாரம் செல்லாமலேயே வென்ற ஜெயலலிதா.. 1996 தேர்தலில் அதே தொகுதில் 8,366 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வேட்பாளரிடம் தோற்றார். 173 தொகுதிகளில் வென்று தி.மு.க.தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது.



அ.தி.மு.க. தோற்றது, தி.மு.க வென்றதுகூடச் செய்தியல்ல... சில ஆண்டுகளுக்குப்பின் ஜெயலலிதா யாரைத் தத்தெடுத்தாரோ... அதே சுதாகரனை கஞ்சா வழக்கில் கைதுசெய்தார் ஜெயலலிதா. ஏறத்தாழ 10 மாதங்கள் சிறையில் வைத்தார். சுதாகரனும், "என் சம்பந்தம் இல்லாமல் என்னைத் தத்தெடுத்துவிட்டார்கள்..." என்று ஆங்கில இதழகளுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். இன்று, அதே சுதா கரன் தான்... அப்பலோவில் ஜெயலலிதாவைப் பார்க்க தன் சொந்த அத்தையால் அனுமதி மறுக்கப்பட்டு வாசலில் நின்று கொண்டிருக்கிறார்.



(தொடரும்)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்துரை அன்னம்மா



சக்கலாவத்தை கரணவாய் வடக்கை பிறப்பிடமாகவும் கல்லுவம் கரணவாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை அன்னம்மா அவர்கள் 15.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவரான இராசரத்தினம் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலம் சென்றவர்களான சரவணமுத்து-சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- பொன்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் சந்தானலக்ஷ்மி (ஜேர்மனி), இராஜ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலசேகரம் (ஜேர்மனி), நவநீதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விதுஷன்,சதுஷன்,றக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தங்கராசா-செல்லம்மாவின் அன்புச் சகோதரியும் விஜயலக்ஷ்மி, காலஞ்சென்றவர்களான இராசம்மா (தேவி),சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சிறிய தாயாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.01.2017 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லுவம் கரணவாய் மேற்கு. (சி/7264) தகவல்:- குடும்பத்தினர்

# ஜி.எஸ்.பி.பிளஸ் தற்காலிகமானது

### சிறி காரியவசம்

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தற்காலிகமானது என இலங்கை வங்கியின் முன்னாள் தலைவர் உதய சிறி காரியவசம் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல நெலும் வீதியில் அமைந்துள்ள பொது ஜன முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர் மத்திய வருமானம் ஈட்டும் நாடுகளுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் வழங்கப்படாது.

இலங்கை இந் நிலையை எட்டுவதற்கு மிகவும் அண்மித்த நிலையில் காணப்படுகின்றது.

இலங்கைக்கு தற்போது வரிச் சலுகை கிடைக்கப் பெற்றாலும் தனிநபர் தலா தேசிய வருமானம் 200 டொலர்களினால் உயர்வடைந்தால் இந்த சலுகைத் திட்டம் ரத்தாகிவிடும்.

4036 முதல் 12475 அமெரிக்க டொலர்கள் வரையில் தனிநபர் தலா தேசிய வருமானத்தைக் கொண்ட நாடுகளுடைய உயர் மத்திய வருமானம் ஈட்டும் நாடுகளின் வரிசையில் உள்ளடக்கப்படும். எமது தனிநபர் தலா தேசிய வருமானம் 3800 அமெரிக்க டொலர்களாகும்.

இன்னும் 200 டொலர்கள் வருமானம் உயர்த்தப்பட்டால் எமக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகும். (இ-7)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
♦ செய்திகள்
♦ புகைப்படங்கள்
♦ நிகழ்வுகள்
♦ பேசும் படங்கள்
போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல
076 636 3378
Viber

# facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 960

வினுஜன்




சீலன்




ராதை




லக்ஷி




ஜீவி



அரிமா

நம்மைத் தொலைத்தவர்களை தேடக்கூடாது..

நம்மைத் தேடுபவர்களை தொலைத்துவிடவும் கூடாது..

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தனியார் மருத்துவக்கல்லூரியை தடைசெய்யக்கோரி பகிஷ்கரிப்பு

## யாழ். பல்கலை மாணவர்கள் முன்னெடுப்பு








மாலபே சைற்றம் தனியார் மருத்துவக்கல்லூரியை தடைசெய்யக்கோரி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று முதல் தொடர்ச்சியான வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ள அதேவேளை மருத்துவ பீட முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தின் முதற்கட்டமாக ஒரு வாரம் தமது வகுப்புகளை புறக்கணித்து சமூக மட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாடுகளையும் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக மாணவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

மாலபே பகுதியில் அமைந்துள்ள சைற்றம் (SAITM) தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிரான சில கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்து இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக மருத்துவ துறையினர் பல்வேறு எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

அந்த வகையில் இலங்கையில் அனைத்து பாகங்களிலும் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் உள்ள மருத்துவ பீட மாணவர்கள் தொடர்ச்சியான வகுப்பு பகிஷ்பரிப்பை ஆரம்பித்துள்ளனர். அந்த வகையில் நாம் இன்றைய (நேற்று) தினம் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

வகுப்பு பகிஷகரிப்பு மூலம் எமது எதிர்ப்பினை தெரிவிப்பது மட்டுமல்லாமல் குறித்த தனியார் மருத்துவக் கல்லூரியினால் எமது நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் எவ்வாறான பாதிப்புக்கள் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள விளைவு என்னவென்றும் குறித்த விடயம் திட்டமிட்டு மக்கள் மத்தியில் மறைக்கப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவிக்கும் முகமான சமூக மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாட்டையும் ஆரம்பித்துள்ளோம்.

உதாரணமாக பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், அரச அதிகாரிகள் மட்டத்தினர், பொது இடங்கள், அரச நிறுவனங்கள் என மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இந்த விழிப்புணர்வு செயற்பாட்டை ஆரம்பித்துள்ளோம்.

குறித்த தனியார் நிறுவனம் தமது பணத்தையும் தமது அரசியல் செல்வாக்கினையும் பயன்படுத்தி மக்களுக்கு தாம் நல்லது செய்வதான ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளார்கள் என்ற உண்மையினை வெளிக்கொண்டு வரும் முகமாக சமூக மட்டங்களில் இந்த விழிப்புணர்வை ஆரம்பித்துள்ளோம்.

முதற்கட்டமாக ஒரு வார வகுப்பு பகிஷ்கரிப்பு மற்றும் விழிப்புணர்வு செயற்பாட்டினை மேற்கொள்ளவுள்ளதுடன் அனைத்து பல்கலைக்கழக செயற்குழுவின் முடிவின் படி அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். அரசு உடனடியான தீர்வினை எமக்கு வழங்கும் பட்சத்தில் நாம் இப போராட்டத்தை நிறைவு செய்வோம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9)

## இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் இவ்வாரம் கடமைகளை பொறுப்பேற்பார்



(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்திய தூதுவரான டரன்ஜித் சிங் சந்து இவ்வாரம் இறுதியில் கொழும்பில் தனது கடமைகளை பொறுப்பேற்க உள்ளார். இந்திய குடியரசு தினம் எதிர் வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற உள்ள நிலையில் அதற்கு முன்னர் இலங்கைக்கான இந்திய இராஜதந்திர சேவைகளை ஆரம்பிக்க உள்ளார்.

வோஷிங்டனில் இந்தியாவிற்கான துணை தூதுவராக கடமையை முன்னெடுத்து வந்த டரன்ஜித் சிங் சந்து 2000 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் இலங்கையில் இந்திய தூதரகத்தின் அரசியல் துறை செயலராக பதவி வகித்தார். இலங்கையின் அரசியல் மற்றும் தேசிய இனப்பிரச்சினை உள்ளிட்ட பல வேறு விடயங்கள் தொடர்பில் பூரண தெளிவை கொண்ட அவர மீண்டும் இலங்கையில் இந்திய இராஜதந்திர சேவைகளை முன்னெடுக்கவுள்ளார.

தற்போது விமர்சனங்களை தோற்றுவித்துள்ள இந்தியாவுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டு ஒப்பந்தம் மற்றும் இந்தியன் ஓயில் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட சீனக்குடா எண்ணெய்க் குதங்களில் மூன்றை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டுக்கு மீள பெற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருடன் கலந்துரையாட உள்ளார்.

இலங்கை உள்ளிட்ட முக்கிய நாடுகளில் இந்தியாவை பிரதிநிதித்துவம் செய்து இராஜதந்திர சேவையில் ஈடுபட்ட டரன்ஜித் சிங் சந்து மீண்டும் இலங்கையில் கடமைகளை முன்னெடுக்க உளளார். உள்நாட்டு போரின் போதைய குறுகிய கால கடமை நிமித்தம் அனுபவத்தைகொண்ட டரன்ஜித் சிங் சந்து, தற்போது இலங்கையின் அமைதி சூழலில் பணிபுரியவுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய இலங்கையின் பயணத்தில் இந்தியாவின் ஒத்துழைப்புக்களை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-3)

## ஆயிரத்து 311 டெங்கு நோயாளர் 15 நாட்களுக்குள் இனம்காணல்



இந்த வருடத்தின் 15 நாட்களுக்குள் 1311 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


கொழும்பு மாவட்ட பகுதியில் மட்டும் இக்காலப்பகுதியில் 342 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 126 ஆகும்.

இதேபோன்று கம்பகா மாவட்டத்தில் 84 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை அடையாளங்காணப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் 38 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15 நாட்களுக்குள் கொழும்பு மாநகர எல்லை பகுதிக்குள் 157 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மீண்டும் இலங்கைக்கு வருகிறார் கசினோ நிறுவன பிரதானி பெக்கர்





(கொழும்பு)

உலகின் முதல் தர கசினோ வரத்தகரான கிரவ்ன் கசினோ நிறுவன பிரதானி அவுஸ்திரேலியாவின் ஜேம்ஸ் பெக்கர் மீள இலங்கைக்கு வரவுள்ளார். அனைத்து உல்லாசங்களுடனும் கூடிய கிரவ்ன் ஹோட்டல் எனும் பெயரில் 457 மில்லியன் டொலர் பெறுமதியான முதலீட்டுடன் அவர் இவ்வாறு இலங்கை வரவுள்ளதாக அறிய முடிகிறது.


இதற்கு முன்னர் ஜேம்ஸ் பெக்கர் இந்த முதலீட்டு திட்டத்துடன் இலங்கைக்குள் வர முயன்றபோதும் மக்களின் எதிர்ப்பு காரணமாக கசினோவுடன் கூடிய அந்த முதலீட்டுத் திட்டத்துக்கான வாய்ப்பு இல்லாமல் போனது.

இந் நிலையில் தற்போதைய அரசாங்கத்தின் உயர் மட்டத்தவர்கள் பலருடன் பெக்கர் இது தொடர்பில் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகவும் அதன் பிரகாரமே அவர் மீள இலங்கையில் முதலீடு செய்ய உத்தேசித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

இதன்போது ஏற்கனவே ஜேம்ஸ் பெக்கரின் கோரிக்கையான கலப்பு முதலீட்டு திட்டத்துக்கான அனுமதியை பெற்றுக்கொள்ளும் வரை தற்போது நடைமுறையில் உள்ள கசினோ அனுமதிப்பத்திரம் ஒன்றின் கீழ் இத்திட்டத்தை முன்னெடுத்து செல்ல ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஏற்கனவே டிஅர. விஜேவர்த்தன மாவத்தையில் பெக்கரின் திட்டத்துக்காக அடையாளம் காணப்பட்ட 500 பேர்ச்சர்ஸ் நிலப்பரப்பில் 36 மாடிகளைக் கொண்ட இந்த கிரவ்ன் ஹோட்டல் திட்டம் அமைக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.(இ-3)

# பாதாள உலகக்குழு பாராளுமன்று வருவதை தடுத்து நிறுத்தத் தேர்தல் முறையில் மாற்றம்



## அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

**தேர்தல் முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்றத்திற்கு வருவதைத் தடுக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் பணம் மட்டுமே வாக்குகளைத் தீர்மானிக்கின்றது. அந்த வகையில் மக்கள் சேவையாளர் ஒருவர் அல்லது ஓர் ஆசிரியர், ஓர் ஊடகவியலாளர் பாராளுமன்றத்திற்கு செல்வது கடினமாக இருக்கின்றது.

செல்வந்தர்களும் மோசமானவர்களுமே தேர்தல்களில் வெற்றி பெற்றுக் கொண்டு வருகின்றனர். இந்த நிலை மாற்றம் அடைய வேண்டும்.

ஜனாதிபதி வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும். அத்தோடு தேர்தல் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று யுத்தம் நிறைவு பெற்று விட்டது. ஆனால் இன்றும் வடக்கு மக்களின் வாழ்வாதாரம் சீர்படுத்தப்படவில்லை.

புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டும் 2 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. இன்னும் வடக்கு மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது.

அதுமட்டுமல்லாது வீடமைப்பு திட்டத்திலும் ஊழல்கள் இடம்பெற்று வருவதாகவே தோன்றுகின்றது.

வடக்கு மக்களுக்கு பணத்தினை கொடுத்தால் அவர்களுக்கு தேவையான வீடுகளை அவர்களே அமைத்துக் கொள்வார்கள்.

அதன்படி வடக்குக்கு விஷேட அபிவிருத்தி திட்டங்களை கொண்டு வந்தால் மட்டுமே தமிழ் மக்களை வெற்றி கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## அதிர்ஷ்ட இலாபம்; பகிஷ்கரிப்பு



(கொழும்பு)

அதிர்ஷ்ட இலாபச்சீட்டு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் ஹற்றன்பிரதேச அதிர்ஷ்ட இலாப சீட்டு விற்பனையாளர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்த வருடம் முதல் லொத்தர் சீட்டு ஒன்றின் விலை 30 ரூபாவாக அறவிடப்படும் என அரசாங்கம் முன்மொழிந்திருந்தது.

குறித்த முன்மொழிவிற்கு எதிர்ப்பு தெரிவித்தே லொத்தர் சீட்டு விற்பனையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர.10 ரூபாவால் விலை அதிகரிப்பு செய்யப்படுவதனால் எதிர்காலத்தில் அதிர்ஷ்ட இலாப தொழிற்றுறையை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விற்பனை யாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3)

## ராஜித சேனாரட்ன மன்ற அனுசரணை வகுப்பு தமிழ்மொழியில் 24 பேர் பல்கலைக்குத் தெரிவு



(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தில் தமிழ்மொழி மூலம் விஞ்ஞானப்பிரிவில் க.பொ.த. உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவர்கள் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக டாக்டர் ராஜித சேனாரட்ன மன்றத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான கல்வித் திட்டத்தில் பயின்ற 24 மாணவர்களில் 22 பேர் பல்கலைக் கழக அனுமதியைப்பெற்றுள்ளதாக ராஜித சேனாரட்ன மன்றம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பல்கலைக் கழகம் தெரிவான 24 பேரில் 3பேர் மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இது குறித்து டாக்டர் ராஜித சேனாரட்ன மன்றத்தின் தர்கா நகர் பிரிவின் தலைவரும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான கலாநிதி எம்.எஸ். எம.ரூமி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## தென்னை பயிர்ச்செய்கையாளர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு கரைச்சியில்

தென்னை பயிர்ச்செய்கை சபையினால் தென்னை பயிர்ச்செய்கையினை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தென்னை மண் ஈரப்பதன் பேணல், தென்னை மரங்களுக்கான டொலமைற் பிரயோகம், ஈடு பயிர்ச்செய்கை மற்றும் தென்னை மட்டைக்குழி அமைத்தல் போன்ற எமது மானிய திட்டங்களின் ஊடாக பயனடைந்து வருகின்றனர்.

எனவே 2016 ஆம் ஆண்டிற்கான மேற்படி வேலைத் திட்டங்களினை மேற்கொண்டவர்களை ஊக்குவிக்கும் முகமாக மானியக் கொடுப்பனவு வழங்க உத்தேசித்துள்ளோம்.

எனவே அதன் முதற் கட்டமாக கடந்த வருடம் பயனடைந்தபயனாளிகளுக்கு 26.01. 2017 ஆம் திகதி அன்று முற்பகல் 10 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் அறிவித்துள்ளார். (இ

## கண்டி வைத்தியசாலையில் ஏஎச்1-என்1 நோயாளிகள் 12 பேர் இனங்காணப்பட்டனர்


கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சந்தேகத்துக்கிடமான 20 நோயாளிகளில் இதுவரையில் 12 நோயாளிகளே ஏஎச்1-என்1 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இருப்பது பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டு கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும வைத்தியசாலையின்பிரதி பணிப்பாளர் வைத்தியர் சந்தன விஜேசிங்க தெரிவித்தார்.

ஏஎச்1-என்1 வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு விசேட சிகிச்சை பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதால் இது குறித்து மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டி போதனா வைத்தியசாலையில் சிறுநீரக சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மூன்று நோயாளிகள் இறந்த சம்பவத்தில் அவர்களுள் இருவருக்கு மாத்திரமே மேற்படி வைரஸ் தோற்று காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

விசேடமாக கர்ப்பிணி பெண்கள், முதியோர், குழந்தைகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறும் வீண் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் கண்டி போதனா வைத்திய சாலைக்கு அத்தியாவசிய தேவைக்காக அன்றி வருகை தருவதை தவிர்த்து கொள்ளுமாறும் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் மேலும் வேண்டுகோள் விடுத்தார்.

தும்மல், தடிமன் மூக்கில் நீர் வடிதல், இருமல் போன்றவற்றின்போது இவ்வைரஸ் ஏனையவர்களுக்கு பரவக்



கூடிய சந்தர்ப்பம் அதிகமாகும் என்பதால் பிரத்தியேகமான கைக்குட்டை உபயோகிப்பதுடன் கைகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்குகின்றனர்.

சுகாதார பணிப்பாளர் நாயகம் ஜயசுந்தர பண்டார வைத்தியசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை கண்டறிந்து தேவையான ஆலோசனைகளை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் தேவையான மருந்து வகைகளும் ஆலோசனைகளும் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

கண்டி போதனா வைத்தியசாலை விசேட வைத்தியர்கள் உள்ளடக்கிய வைத்திய குழுவினால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தேவையான போது அவசியமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு தாயார் நிலையில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.(இ-3)

## மன்னிப்பு கோரியது அமேசான்

(டில்லி)

அமேசான் நிறுவனத்தின் கனடா பிரிவு இணையத்தளத்தில் இந்திய தேசியக் கொடி போன்ற கால் மிதியடி விற்பனைக்கு வைக்கப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இது தொடர்பான புகைப்படங்களும் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தேசியக் கொடியை அவமதிக்கும் விதமாக இருப்பதாக அமேசானுக்கு எதிராக விமர்சனங்களும் கண்டனங்களும் எழுந்தன.

இவ்விவகாரத்திற்கு கண்டனம் தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், "இச் சம்பவத்திற்கு அமேசான் நிறுவனம் மன்னிப்பு கேட்க வேண்டும். அல்லது நாங்கள அமேசான் அதிகாரிகளுக்கான இந்திய விசாக்களை இரத்து செய்வோம்" என எச்சரித்தார்.

"அமேசான் முதலில் நிபந்தனையற்ற மன்னிப்பை கேட்க வேண்டும். அமேசான் நிறுவனம் எங்களது தேசியக் கொடியை அவமதிக்கும் வகையிலான அனைத்து பொருட்களை இணையத்தளத்தில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும். இது உடனடியாக செய்யப்படவில்லை என்றால் நாங்கள் அமேசான் அதிகாரிகளுக்கு இந்திய விசா வழங்க மாட்டோம். முன்னதாக வழங்கப்பட்ட விசாக்களையும் இரத்து செய்வோம்" என்று எச்சரித்தார் சுஷ்மா சுவராஜ்.

அமேசானில் இந்திய தேசியக் கொடி மட்டுமன்றி இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவின் தேசியக் கொடிகளும் கால்மிதியடிகள் போல விற்பனைக்கு வைககப்பட்டது கடும் கொந்தளிப்பை உண்டாக்கியது.


சுஷ்மா எச்சரிக்கையை அடுத்து இந்திய தேசியக் கொடி அவமதிப்பு செய்யப்பட்ட விவகாரத்தில் அமேசான் நிறுவனம் மன்னிப்பு கோரியது.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மாவற்கு அமேசான் எழுதி உள்ள கடிதத்தில் இந்தியர்களின் உணர்வுகளை காயப்படுத்தும்வகையில் விளம்பரம் வெளியிட்டதற்கு மன்னிப்பு கோருவதாக கூறியுள்ளது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

## எத்தன் செய்த தந்திரம்!



...நான், போன மாதம் பக்கத்து ஊரு பங்காரு நாயுடுவிடம், ஐநூறு வெள்ளிப் பணத்தைக் கடனாக வாங்கியிருந்தேன். அதைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்!" என்றார்.இப்படி வணிகர் கூறியதும், "ஆமாம்! சாகும்போது கடனோடு சாகக் கூடாது,"என்றனர் அந்தக் கட்டிலைச் சுற்றி நின்ற கூட்டத்தினர்.

"அது சரி வணிகரே... நீங்க சொன்ன அந்தப் பங்காரு நாயுடுவை, நாங்கள் எப்படி அடையாளம் கண்டு கொள்வது?" என்று, அங்கிருந்தவர்களில், விஷயம் தெரிந்து ஒருவர் தான் இப்படிக் கேட்டார்.

"இப்போது நண்பகல் ஆகிறதல்லவா... இன்று மாலை ஆறு மணிக்கெல்லாம் இங்கே, வெள்ளை வேட்டி, சிவப்புச் சட்டை, நீலத்துண்டு அணிந்து, கையில் வெற்றிலை டப்பாவுடன் ஒருவர் வருவார். நெற்றியில் பெரிய நாமம் கூடப் போட்டிருப்பார். அவர் தான் பங்காரு நாயுடு!" என்று முடித்தார், கட்டி லில் பிணமாய்க் கிடந்த வணிகர்.

"சரிங்க... அவரிடமே கொடுத்துடறேன்," என்று தலையாட்டினாள் வணிகரின் மனைவி.

அதற்குப் பிறகு வணிகருக்குப பேச்சுமில்லை மூச்சுமில்லை.

கட்டிலுக்குக் கீழே உள்ள அந்த மரப்பெட்டிக்குள் ஒளிந்து கொண்டு எத்தன் நடத்தும் இந்த நாடகத்தை, சற்று தொலைவில் நின்று பார்த்துக் கொண டிருந்த கொமுரு, அந்தத் திருக்கடையூர் எத்தனின் சாமர்த்தியத்தை எண்ணி மிகவும் வியந்து போனான்.

கட்டிலுக்குக் கீழே இருக்கும் இந்த எத்தன், இனி யாரும் அறியாதபடி முதலில் வெளியே வந்தாக வேண்டும். பின்னரே, பங்காரு நாயுடு போல வேஷம் போட்டு ஏமாற்ற முடியும். ஏன், நாமே இந்த வேஷத்தைப் போட்டு, இங்கிருப்பவர்களை ஏமாற்றி, இந்த ஐநூறு வெள்ளிப் பணத்தையும் அப்படியே அடித்துக்கொண்டு போகக்கூடாது. இப்படி யோசிக்கலானான் கொமுரு. அவ்வளவுதான்... உடனே புறப்பட்டான் அந்த எண்ணத்தைச் செயலாக்க.

ஒரு துணிக்கடைக்குச் சென்று, வெள்ளைவேட்டி, சிவப்புச்சட்டை, நீலத்துண்டு போன்றவற்றை வாங்கி அணிந்து கொண்டான். நெற்றியில் பெரிய நாமமும், கையில் வெற்றிலை டப்பாவுடனும், வணிகர் வீடு போய்ச் சேர்ந்தான்.

பங்காரு நாயுடுவைப் பார்த்ததுமே, மறுபேச்சின்றி, ஐநூறு வெள்ளிப் பணத்தை அப்படியே மூட்டையாகக் கட்டிக் கொடுத் தாள் வணிகரின் மனைவி. அதை வாங்கிக்கொண்ட கொமுரு, அங்கிருந்து உடனே புறப்படத் தொடங்கினான் வேக வேகமாக. அவன் புறப்படத் தொடங்கிய அந்தச் சமயத்தில் தான், கட்டிலுக்குக் கீழே ஒளிந்திருந்த எத்தன், மெல்ல வெளியே வந் தான். அப்படி வெளியே வந்த வன், தான் தெரிவித்த அதே பங்காரு நாயுடு மாதிரியான தோற்றத்தோடு கூடிய ஒருவன் இப்போது மெல்ல நழுவிக் கொண்டு இருப்பதைப் பார்த்த தும் திடுக்கிட்டுப் போனான்.

நம்முடைய திட்டத்தை முன்கூட்டியே தெரிந்துகொண்டு விட்ட எவனோ ஒருவன் தான், இப்படி இங்கிருப்பவர்களையெல்லாம் ஏமாற்றிப் பண மூட்டையோடு நழுவிக்கொண்டிருக்கிறான் எனச் சட்டென உணர்ந்தான் எத்தன். அவ்வளவுதான், பண மூட்டையோடு நழுவும் அவனை விரட் டிப் பிடிப்பதென முடிவு செய்தான். அடுத்த நொடியே, முடிவு செயலானது.

(தொடரும்...)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2017 17

- 1377 - பாப்பாண்டவர் பதினோராம் கிரெகரி தனது ஆட்சியை ரோமுக்கு மாற்றினார்.
- 1524 - இத்தாலிய நாடுகாண்பயணி ஜியோவன்னிடா வெரசானோ சீனாவுக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார்.
- 1595 - பிரான்சின் நான்காம் ஹென்றி ஸ்பெயின் மீது போரை அறிவித்தான்.
- 1648 - இங்கிலாந்தின் லோங் நாடாளுமன்றம் முதலாம் சார்ல்சுடனான தொடர்புகளை அறுத்தது. இதன் மூலம் இங்கிலாந்தின் உள்நாட்டுப் போர் இரண்டாம் கட்டத்தை அடைந்தது.
- 1773 - கப்டன் ஜேம்ஸ் குக் அண்டார்க்டிக் வட்டத்தை அடைந்த முதல் ஐரோப்பியன் ஆனான்.
- 1819 - சைமன் பொலிவார் கொலம்பியக் குடியரசை அறிவித்தார்.
- 1852 - ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் போவர் குடியேற்றங்களை அங்கீகரித்தது.
- 1893 - ஹவாயில் அமெரிக்க கடற்படையின் தலையீட்டால் அரசி லிலியோகலானியின் அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1899 - பசிபிக் பெருங்கடல் பகுதியில் வேக் தீவை ஐக்கிய அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது.
- 1917 - கன்னித் தீவுகளுக்காக ஐக்கிய அமெரிக்கா கூ25 மில்லியனை டென்மார்க்கிற்குக் கொடுத்தது.
- 1928 - லியோன் ட்ரொட்ஸ்கி மொஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் போலந்தின் வார்சா நகரைக் கைப்பற்றினர்.
- 1945 - சோவியத் படைகள் நெருங்கியதை அடுத்து அவுஷ்விட்ஸ் வதை முகாமில் இருந்து நாசிகள் வெளியேற ஆரம்பித்தனர்.
- 1946 - ஐநா பாதுகாப்பு அவை தனது முதலாவது கூட்டத்தை நடத்தியது.
- 1951 - சீன மற்றும் வட கொரியப் படையினர் சியோல் நகரைக் கைப்பற்றினர்.
- 1961 - கொங்கோ சனநாயகக் குடியரசின் பிரதமர் பாட்ரிஸ் லுமும்பா இராணுவப் புரட்சியின் பின் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1973 - பேர்டினண்ட் மார்க்கோஸ் பிலிப்பீன்சின் நிரந்தர அதிபர் ஆனார்.
- 1991 - வளைகுடாப் போர் ஆரம்பித்தது.
- 1995 - ஜப்பானின் கோபே நகரில் இடம்பெற்ற 7.3 ரிக்டர் நிலநடுக்கத்தில் 6,434 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998 - ஐக்கிய அமெரிக்கத் தலைவர் பில் கிளின்டன் தன்னைப் பாலியல் வதைக்கு உட்படுத்தியதாக போலா ஜோன்ஸ் குற்றஞ்சாட்டினார்.

### பிறப்புகள்

- 1706 - பெஞ்சமின் பிராங்கிளின், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர், எழுத்தாளர் . (இ. 1790)
- 1911 - ஜோர்ஜ் ஸ்டிக்லர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் . (இ. 1991)
- 1917 - எம். ஜி. இராமச்சந்திரன், தமிழ்நாட்டின் முதலமைச்சர் . (இ. 1987)
- 1942 - முகமது அலி, அமெரிக்கக் குத்துச்சண்டை வீரர்.
- 1977 - என். சொக்கன், தமிழக எழுத்தாளர்.
- 1982 - டுவேன் வேட், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### இறப்புகள்

- 1961 - பாட்ரிஸ் லுமும்பா, கொங்கோ சனநாயகக் குடியரசின் பிரதமர். (பி. 1925)
- 2002 - கமீலோ ஜோஸ் சேலா, நோபல் பரிசு பெற்ற ஸ்பானிய எழுத்தாளர் . (பி. 1916)
- 2007 - ஆர்ட் புச்வால்ட், அமெரிக்க நகைச்சுவையாளர் . (பி. 1925)
- 2008 - பாபி ஃபிஷர், அமெரிக்க சதுரங்க ஆட்டக்காரர் . (பி. 1943)
- 2009 - கமில் சுவெலபில், செக் நாட்டுத் தமிழறிஞர் . (பி. 1927)
- 2010 - ஜோதிபாசு, இந்தியா மேற்குவங்க மாநிலத்தில் நீண்டநாள் முதல்வராக இருந்தவர் . (பி. 1914)
- 2014 - சுசித்ரா சென், வங்காளத் திரைப்பட நடிகை. (பி. 1931)

## மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.



எம்.ஜி.இராமச்சந்திரன் இலங்கையின் கண்டிக்கு அருகேயுள்ள நாவலப்பிட்டியில் மருதூர் கோபால மேனனுக்கும் சத்தியபாமாவுக்கும் மகனாகப் பிறந்தார். அவருடைய தந்தை மருதூர் கோபாலமேனன் சட்டத்தணியாகக் கேரளாவில் பணிபுரிந்தார். அவருடைய மறைவுக்குப் பின்னர் தமிழ் நாட்டின் கும்பகோணத்தில் எம்.ஜி.ஆர். குடியேறினார். குடும்ப சூழ்நிலைகளின் காரணமாகப் படிப்பைத் தொடர முடியாததால் இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். இவருடன் சக்ரபாணி என்ற சகோதரரும் நாடகத்தில் நடித்தார். நாடகத்துறையில் நன்கு அனுபவமான நிலைமையில் திரைப்படத்துறைக்குச் சென்றார். திரைப்படத்துறையில் தனது அயரா உழைப்புக் காரணமாக முன்னேறி முதன்மை நடிகரானார். இவரது நடிப்பு பெரும் எண்ணிகையிலான மக்களைக் கவர்ந்தது. எம்.ஜி.ஆர். திரைப்பட இயக்குநரும் தயாரிப்பாளருமாவார். காந்திய கொள்கைகளால் உந்தப்பட்டு, இவர் இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். எம்.ஜி.ஆர். என்ற பெயரில் புகழ் பெற்ற, மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் (எம். ஜி. இராமச்சந்திரன், ஜனவரி 17, 1917 - டிசெம்பர் 24, 1987), தமிழ்த் திரைப்பட நடிகராகவும் 1977 முதல் இறக்கும் வரை தமிழ் நாட்டின் தொடர்ந்து மூன்று முறை முதலமைச்சராகவும் இருந்தவர். எம்.ஜி. சக்கரபாணி அவர்களின் தம்பியான இவர், தொடக்க காலத்தில் நாடகங்களில் நடித்தார். அண்ணல் காந்தியடிகளின் கருத்துக்களால் ஈர்க்கப்பெற்று தேசிய முற்போக்கு காங்கிரஸில் இணைந்தார்.அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப்பிறகு, கருணாநிதியால் தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டார். அதன் பின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சியைத் தொடங்கி, தேர்தலில் நின்று தொடர்ந்து மூன்று முறை தமிழகத்தில் வெற்றிபெற்று முதலமைச்சரானார். இவர் உயரிய விருதுகளில் ஒன்றான பாரத ரத்னா விருதினைப் பெற்றவர் ஆவார்.

உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கின்றான் - நார்மன் வின்சென்ட் பீல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்க நம் புத்திஜீவிகள் தயாரா?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வன்னி பெருநிலப்பரப்பில் போர் நடத்தி தமிழ் மக்களை முட்கம்பி வேலிகளுக்குள் அடைத்து நடத்திய அட்டூழியம் முதல் போருக்குப் பின்பாக தென்பகுதி மக்களை வடபுலத்திற்கு சுற்றுலா என்ற பெயரில் அனுப்பி வைத்து; வடக்கில் அவர்களை குடியமரச்செய்து; வடபுலம் எங்கும் புத்தர் சிலைகளை அமைப்பித்து; வெசாக் பண்டிகையை தமிழர் தாயகத்தில் பெருமெடுப்பில் கொண்டாடி தென்பகுதி ஆதிக்கத்தை வடக்கு கிழக்கு முழுமையிலும் விஸ்தரித்ததன் பின்னணியில் சிங்களப் புத்திஜீவிகள் அமைப்பாக செயற்பட்டனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

சுருங்கக்கூறின் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை வேரறுப்பதற்காக மகிந்த ராஜபக்ஷவிற்கு வியூகம் அமைத்து கொடுத்தவர்கள் சிங்களப் புத்திஜீவிகள்.

வன்னி யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டபோது, சிங்களப் புத்திஜீவிகள் எவரும் இஃது அநியாயம் என்று கூறிலர்.

மாறாக தமிழ் மக்களை அடக்கவேண்டும் தனிநாடு என்ற நினைப்பை அவர்களின் மனங்களில் இருந்து பிடுங்கவேண்டும் என திட்டம் தீட்டியவர்கள் சிங்களப் புத்திஜீவிகள் என்பதே உண்மை.

எனினும் அவர்கள் மிகவும் அமைதியாக - இரகசியமாக இருந்து தம் பணியைச் செய்தனர்.

ஆனால், தமிழ் மக்களிடம் இத்தகைய ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்பதோடு அதற்கான ஓர் அவசியப்பாட்டை நம் அரசியல் தலைமையும் ஏற்படுத்தவில்லை.

போருக்குப்பின்பாக தமிழ் மக்களின் மீள் எழுகை பெற்று உரிமை பெறுவதற்கும் கல்வி, மருத்துவம் தொடர்பில் நம் அரசியல் தலைமைக்கு கரிசனை இருந்திருக்குமாயின், தமிழ்ப் புத்திஜீவிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒன்றிணைத்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அரசியல் ரீதியில் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டிருப்பர்.

ஆனால், இவை எதுவும் நடக்க வில்லை. மாறாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக பேரினவாத ஆட்சிக்கு ஆதரவான, வெளிநாடுகளில் இருக்கக் கூடிய தமிழர் சிலரே, தமிழ் அரசியல் தலைமைக்கு ஆலோசனை வழங்கத் தலைப்பட்டனர். இதன் விளைவு இன்று எவ்வாறாக உள்ளது என்பதை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இவை சிங்களப் புத்திஜீவிகளுக்கும் தமிழ் புத்திஜீவிகளுக்குமான ஒரு சிறு உதாரண ஒப்பிடுகை.

இவற்றை ஒருபுறமாக வைத்துக்கொள்ளலாம்.

இப்போது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் வெளிவர இருக்கின்றது. இந்த அரசியல் சீர்திருத்தம் வெளிவந்த பின்பு அதில் எங்களுக்கு தீர்வு இல்லை, எங்களுக்கு பிரயோசனம் இல்லை என்றெல்லாம் கூறுவது பெரிதான தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது.

எனவே வரும் முன்னர் நாம் விழிப்படைய வேண்டும். எங்கள் விழிப்பு முதலில் எங்கள் அரசியல் தலைமையை விழிப்படையசெய்வதாக அமைவதே அவசியம். இதனூடாக அரசாங்கத்தை விழிப்படைய வைக்க வேண்டும்.

இதைச் செய்வதற்காகவாவது தமிழ்ப் புத்திஜீவிகள் ஒன்றாக ஓரணியில் இணைய வேண்டும். இந்த அணிதிரளல் உள் நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ் புத்திஜீவிகளின் இணைவாக இருப்பதும் கட்டாயம். இந்த இணைவு தமிழ்மக்களுக்கான ஒரு புதிய அரசியல் தலைமையை உருவாக்குவது என்பதாக இருக்கும். தமிழ் மக்களுக்காக - தமிழ் இனத்திற்காக - தமிழ் மண்ணிற்காக தங்களை அர்ப்பணிக்கக்கூடிய நேர்மையான திறமையான, அபார அறிவுடைய தமிழ் சகோதரர்களைக் கொண்ட அரசியல் தலைமை தலைமையாக அமையும் போது இப்போது இருக்கின்ற தமிழ் அரசியல் தலைமை தன்னிலை குறித்து விழிப்படையும்.

இதைச் செய்யத்தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் தமிழர்கள் தமிழ் அரசியல் தலைமையால் ஏமாற்றப்படுவது நடந்து கொண்டே இருக்கும்.

ஆகையால், தமிழ் புத்திஜீவிகள் இனியேனும் ஒன்று சேர்ந்து அன்னைத் தமிழைக் காப்பாற்றட்டும்.

## நிஷங்க மற்றும் பாலித வெளிநாடு செல்லத்தடை

அவன் கார்ட் தலைவர் நிஸங்க சேனாதிபதி, ரக்ன ஆராக்ஷ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோருக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நீதவான் லால் பண்டாரவினால் இந்த உத்தரவு நேற்றுக் காலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவன் கார்ட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பிலான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே, இருவரினதும் கடவுச் சீட்டுக்களை தடுத்து வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார். இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தரம் 6 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் 6 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நாளை மறுதினம் 19.01.2017 வியாழக்கிழமை அன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் தம்பையா மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக நல்லை ஆதீன குரு முதல்வர் வருகை தந்து மாணவர்களுக்கு ஆசி வழங்கவுள்ளார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் சமுகமளித்து நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# ஜல்லிக்கட்டு போட்டிக்காக பா.ஜ.க. உண்மையாகப் போராடி வருகிறது

### எச்.ராஜா கூறுகிறார்

(சிங்கம்புணரி)

ஜல்லிக்கட்டுப் போட்டியை மீண்டும் நடத்த பாரதிய ஜனதாக கட்சி உண்மையாகப் போராடி வருகிறது என்று அதன் தேசிய செயலாளர் எச். ராஜா தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் தடையை மீறி ஜல்லிக்கட்டு நடக்கும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

இதையடுத்து அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயலாளர் எச்.ராஜா தனது சொந்த காளையை சீரணி அரங்கம் முன்பு அவரே அழைத்து வந்து அவிழ்த்து விட்டார். அதனை பிடிக்க ஏராளமான இளைஞர்கள் விரட்டி சென்றனர். எச். ராஜாவின் இந்த செயலால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பிணணர் அவர் நிருபர்களிடம கூறியதாவது.

நம் பாரத நாடு பழம் பெருமையான நாடு. இங்கு விவசாயம் தான் முக்கிய தொழிலாக உள்ளது. விவசாயத்துக்கு பல்வேறு வகையிலும் மாடுகள் உதவியாக இருந்து வருகின்றன. ஜல்லிக்கட்டு கண்டிப்பாக நடக்க வேண்டும். இதற்காக பாரதிய ஜனதா கட்சி உண்மையாக போராடி வருகிறது. மத்திய அரசு அவசர சட்டம் கொண்டு வந்து ஜல்லிக்கட்டை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறுகிறார்கள்.

ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்குழ் போது அவசர சட்டம் கொண்டு வர முடியாது. சட்டம படித்தவரகளுக்கு இது தெரியும்.

மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போது தான் ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டது. அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி ஜல்லிக்கட்டுக்கு பாரதிய ஜனதா கட்சி ஆதரவாக இருக்கும். ஜல்லிக்கட்டு பிரச்சினையில் சிலர் தனி தமிழ் நாடு கோரிக்கையை எழுப்பி வருகின்றனர்.

அவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டும். ஜல்லிக் கட்டுக்கு பிரச்சினையை திரைத்துரையினர் தூபம் போட்டு வளர்க்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## எம்.ஜி.ஆரின் பிறந்ததினம்

யாழ்ப்பாணம் எம்.ஜி. ஆர்.நற்பணிக்கழகம் நடத்தும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இன் 100 ஆவது பிறந்த தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்வியங்காடு சந்தியிலுள்ள எம்.ஜி. ஆர். சிலையடியில் இடம்பெறும். ஈழத்து எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆ. நடராஜன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க் கிழமைகாலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் பாரதிவீதி, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில புதுக்குடியிருப்பு, கோம்பாவில், இரணைப்பாலை, மூங்கிலாறு, உடையார்கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், தேராவில், 68 ஆவது பிரிவு இராணுவமுகாம், 683ஆவது இராணுவமுகாம், Hydramani ஆடைத்தொழிற்சாலை, 18 VIR இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக்குளம் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் தலைமன்னார் கிராமம், படப்பாடி, பேசாலை ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிர தேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சாஸ்திரங்கள்

✦ தேய்பிறையில் அஷ்டமியிலும் சதுர்த்தசியிலும் ஒருவேளை சாப்பிட்டு உபவாசம் இருந்து சிவபெருமானைப் பூஜிப்பவர்களுக்கு வியாதிகள் நீங்கும்; உடல் வலிமை அதிகரிக்கும்.

-பீஷ்மர்

✦ குளக்குளியலின் போது குளத்திலிருந்து ஐந்து கை அளவு மண்ணெடுத்துக் கரையில் போட்டுப் பின் துளிக்கவும்.

-கிருஹஸ்த தர்மம்

✦ முடிவிழுந்த அன்னம், புழு கலந்த அன்னம், கால்பட்ட அன்னம், காகம், நாய் தீண்டிய அன்னம், பசு முகர்ந்த அன்னம், தூசி விழுந்த அன்னம் ஆகியவற்றை உண்ணக்கூடாது.

-போஜனதர்மம

✦ குதது விளக்கு இருமுகம் ஏற்றினால் குடும்ப ஒற்றுமை ஓங்கும்.

- ஸ்ரீகாரணம்

✦ தாய், தந்தையர்க்காக உண்ணத்தகும் பறவை, விலங்குகளைக் கொல்லலாம். அகத்தியர் அவ்வாறு செய்தார்.

-மனு சாஸ்திரம்

✦ அன்னம், தண்ணீர், ஆடை, எள், நெய், பசு, மண், பொன் தருவதை விட வேதப்பொருள் அறிவிப்பது, கல்வி அறிவிப்பது சிறந்தது. எது கருதி தானம் செய்யப்படுமோ அது கோரிக்கையை நிறைவேற்றும்.

- பொது தர்மம்

✦ சந்திராஷ்டமக் காலங்களில் செம்பருத்தி, அறுகம்புல் இவைகளுடன் இடையில் மல்லிகை கட்டி கணபதிக்கும் திருமாலுக்கும் மாலையாக அணிவித்தால் பல காரியங்கள் நல்லபடியாக முடியும்.

-சந்திராஷ்டம வழியாடு

✦ பூமி நூல், நிமித்த நூல் (சகுன சாஸ்திரம்), மருத்துவம், ஜோதிடம், தர்க்கம் ஆகியவற்றைப் போதித்து அதற்கு ஊதியம் பெறக் கூடாது.

- மனுசாஸ்திரம்


## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ கையில் கலப்பை பிடித்து உழவர்களின் குடிசைகளிலிருந்து புதிய இந்தியா எழட்டும்! மீனவர், சங்கிலியர், தோட்டிகள் ஆகியவர்களின் குடிசைகளிலிருந்து புதிய இந்தியா எழட்டும்! பலசரக்குக் கடைகள், பலகாரக் கடைகளிலிருந்தும் அவள் தோன்றட்டும்! தொழிற்சாலைகள், கடைவீதிகள், சந்தைகள் ஆகியவற்றிலிருந்தெல்லாம் புதிய இந்தியா எழுந்து வரட்டும்! தோட்டங்களிலிருந்தும் குன்றுகளிலிருந்தும் மலைகளிலிருந்தும் புதிய இந்தியா எழுந்து வெளியே வரட்டும்!

❖ எழுமின்! விழிமின்! இந்த நமது தாயகமாகிய பாரததேவி, தனது அழிவற்ற அரியணையின் மீது புதிய இளமை பெற்றவளாக முன்பு எப்போதுமே இருந்ததைவிடவும் அதிகமான மகிமை கொண்டவளாக அமர்ந்திருப்பதைக் காணுங்கள். அமைதியும் வாழ்த்தும் நிறைந்த குரலில் இந்தப் பாரத அன்னையின் மகிமையை உலகம் முழுவதிலும் பிரகடனப்படுத்துங்கள்.

# வரணி இளைஞர்களை வீழ்த்தியது சக்கோட்டை சென்.சேவியர் வி.கழகம்







பருத்தித்துறை உதைபந்தாட்டத்தின் லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் "அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்" ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில்.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் சக்கோட்டை சென் சேவியர் வி.கழக "ஏ", அணி, வரணி இளைஞர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர் கொண்டது.

போட்டி தொடங்கி இரண்டாவது நிமிடத்தில். சென் சேவியர் அணியின் முன்கள 09 இலக்க - வீரர் எஸ். றொசான் தனக்கு கிடைத்த ஒரு வாய்ப்பை அணிக்கான முதலாவது கோலாக மாற்றினார்.

வரணியின் போராட்டங்கள் தொடர்ந்தாலும் முன்கள வீரர்களின் முன்மதியான செயற்பாடுகள் முடக்கப்பட அவர்களால் கோல்கள் அடிக்கபபடமுடியாமலே போயவிடடன. அவ்வாறு சென் சேவியர் அணியின் ஆதிக்கத்துடன் முதல்பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் வரணி அணி முன்னேறி தாக்கும் ஆட்டத்தை தாங்கள் வியூகமாகக்கொண்டு விளையாடினர். இதனால் எதிர் அணியின் கோல் பரப்பை பலதடவைகள் ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

இருப்பினும் சக்கோட்டை சென் சேவியர் வி. கழக "ஏ" அணியின் தற்காப்பு வீரர்களின் தடுப்பாட்டத்தாலும் கோலகாப்பாளரின் சாதுரியமான செயற்பாட்டாலும் வரணி அணியால் எந்தவித கோலையும் பெறமுடியாமற் போனது.

இதற்கிடையில் மீண்டும் தனக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பை அற்புதமாகப் பயனபடுத்தி சென் சேவியர் அணியின் முன்கள 09 இலக்க - வீரர் அபாரமாக 31 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான இரண்டாவது கோலையும் பெற்றுக்கொடுத்தார்.

இறுதியில் சென். சேவியர் வி.கழக "ஏ" அணி 02 கோலை பெற்றுக் கொண்டதனால் வெற்றி பெற்று தொடரில் தனது இடத்தை தக்க வைத்துக்கொள்ள வரணி இளைஞர்கள் அணியை ஒரு கோலையேனும் பெறாமையால் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக தெரிவுசெய்யப்பட்ட சென் சேவியர் வி.கழக "ஏ"அணியின் 09 இலக்க - வீரர் எஸ். றொசானுக்கான பரிசிலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் மூத்த உறுப்பினர் செல்வேந்திரன் வழங்கிக் கௌரவித்தார். (க)



வலி.தென்மேற்கு இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் றோட்டரிக்கழகம் இணைந்து நடத்திய யாழ்.மாவட்டத்தின் பலம்மிக்க 32 அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் வண்ணார்பண்ணை காமாட்சி வி.கழகத்தை வீழ்த்தி வெற்றி கிண்ணத்தையும் ரூபா 30, 000 பணப்பரிசிலையும் தனதாக்கிய இணுவில் கலைஒளி வி.கழகத்தை படத்தில் காணலாம்.

# இலங்.போக்குவரத்து சபையின் விளையாட்டு போட்டி முடிவுகள்





இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலையினால் நடத்தப்பட்ட திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகளின் இறுதி நிகழ்வும் பரிசில்கள் வழங்கும் வைபவமும் ஞாயிற்றுக்கிழமை (15.01.2017) மன்னார் நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வணிக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், குழுக்களின் பிரதித் தலைவர் அ.அடைக்கலநாதன்,வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த போட்டி திணைக்களங்களுக்கு இடையில் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட் ஆகிய விளையாட்டுக்கள் என நடைபெற்றன.

இவ் இறுதிப்போட்டிகளில் உதைபந்தாட்ட போட்டியில் கல்வித் திணைக்கள அணியும் விவசாய திணைக்கள அணியும் மோதியது.

இதில் கல்வித்திணைக்கள அணிவெற்றி பெற்றது. மென்பந்து கிரிக்கெட் போட்டியில் மடு பிரதேச செயலக அணியும் முசலி பிரதேச செயலக அணியும் மோதியது. இப்போட்டியில் மடு பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

கரப்பந்து (Over Game) போட்டியில் தபால் திணைக்கள அணியும் நானாட்டான் பிரதேச செயலக அணியும் மோதியது.இதில் தபால் திணைக்கள அணி வெற்றி பெற்றது. கரப்பந்து (Setup Game) போட்டியில் நீர்வழுங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அணியும் இலங்கை போக்குவரத்து சபை அணியும் மோதி இலங்கை போக்குவரத்து சபை அணி வெற்றியீட்டியதுடன் அவர்களுக்கான கேடயங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (க-9)

# நெடியகாடு இளைஞர் வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி





நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் NORTHERN CHALLENGERS-2016 உதைபந்தாட்ட போட்டியில் (13-01-2017) அன்று நடைபெற்ற போட்டியில் கரவைச் சுடர் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது.

மிகவும் அபாரமாக விளையாடிய குருநகர் பாடும்மீன் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது. (க)

# மாலுசந்தி மைக்கலை வீழ்த்தி சம்பியனாகியது வதிரி சிறிமுருகன்





மாலுசந்தி மைக்கல் அணியை 8 விக்கெட் களினால் வெற்றிபெற்று சம்பியனாகியது வதிரி சிறி முருகன் விளையாட்டுக்கழகம். துன்னாலை வல்லியானந்தா விளையாட்டுக்கழகம் யாழ. மாவட்ட ரீதியாக நடத்தி வந்த கிரிக்கட் போட்டியில் இறுதிப்போட்டி (15.01. 2017) அன்று கழக மைதானத்தில் நடைபெற்றது .

இவ் இறுதிப்போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து வதிரி சிறிமுருகன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 10 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 51 ஓட்டங்களை பெற்றது .

இதில் ரகுவரன் 10, ராகவன்.அமீர்தன் ஆகியோர் தலா 7 ஓட்டங்களை பெற்றனர்.வதிரி சிறிமுருகன் அணியின் பந்துவீச்சுசார்பில் உமைசுதன் 3, பிரணவன் 2, மலரவன் ,டெஸ்மன் தலா 1 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி சிறிமுருகன் அணி 6.3 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

உமைசுதன் 23,அனுதர்சன் 13, மதுர்சன் 12 ஓட்டங்களை பெற்றனர். மைக்கல் அணியின் பந்துவீச்சு சார்பில் தினோஜன், அச்சுதன் தலா 1 விக்கெட்களை வீழ்த்தினர். (க)

# காணாமல்போன...

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை. 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

ஓமந்தை பொலிஸாருக்கு வீதியால் சென்ற பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் ஏ9 வீதி மாணிக்க வளவு பேருந்து தரிப்பிட பகுதிக்கு விரைந்த பொலிஸார். அங்கு மயங்கிய நிலையில் காணப்பட்ட குடும்பஸ்தரை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவருவது.

ஏ 9 வீதி. குறிசுட்டகுளம் கனகராயன்குளம் என்னும் இடத்தில் வசிக்கும் தனபாலசிங்கம் நிஷாந்தன் (வயது 33) என்ற மன்னார் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கை, கால்கள் கட்டப்பட்டு வாயில் பிளாஸ்ர் ஒட்டப்பட்டு மயங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் தகவல் திரட்டுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள குறித்த குடும்பஸ்தரின் தந்தையிடம் சம்பவம் தொடர்பில் கேட்ட போது,

கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் நிசாந்தன் வேலைக்கு செல்வதற்காகவும் மருமகளான ய்ாழினி வவுனியா செட்டிக்குளத்தில் உறவினர் ஒருவரின் மரணச் சடங்கிற்கு செல்வதற்காகவும் ஒன்றாக பேருந்தில் சென்று கொண்டிருக்கும் போது வவுனியா தாண்டிகுளத்தில் மருமகள் யாழினிக்கு அவ்ர் ஆசிரியராக கடமையாற்றும் வவு/குறி சுட்டகுளம் அ.த. க. பாடசாலையில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பினை அடுத்து பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதாக கணவனிடம் தெரிவித்து விட்டு பேருந்திலிருந்து இறங்கியுள்ளார்.

இதையடுத்து எனது மகன் தொடர்ந்து பயணம் செய்து மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு வேலைக்குச் சென்றுள்ளார்.

அன்றைய தினம் மன்னாரில் தங்கி மறுநாள் வேலையை முடித்து வீடு திரும்பிய நிலையில் மருமகள் பாடசாலைக்கும், மரண நிகழ்வுக்கும். செல்லாது காணாமல் போயுள்ளார் என்ற விடயம் தெரிய வந்தது.

இதனையடுத்து உறவினர்கள் வீடுகளில் தேடியும் காணாத நிலையில், கனகராயன் குளம் பொலிஸ் நிலையத்தில் மகனால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் மகன்,

கடந்த 02ஆம் திகதி திங்கட்கிழமை காலை மன்னாருக்கு வேலைக்கு செல்வதாக பேருந்தில் பயணித்துள்ளார். எனினும் இவர் மன்னாருக்கு வேலைக்குச் செல்லவில்லை என்ற தகவல் அறிந்த நிலையில் எனது கடைசி மகன் மூலம் மகனை காணவில்லையென்று கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன் நாங்களும் மகனையும், மருமகளையும் பல இடங்களில் தேடி வந்தோம்.

இந் நிலையில். இன்றைய தினம் (நேற்று) ஓமந்தை பஸ் தரிப்பிடத்தில் கை.கால் கட்டப்பட்ட நிலையில் ஓமந்தை பொலிஸாரால் எனது மகனாகிய தனபாலசிங்கம் நிஷாந்தன் (வயது -33) மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் அறிவித்தல் கிடைத்ததும் வைத்தியசாலைக்கு வந்துள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா தாண்டிகுளத்தில் அவசரமாக பாடசாலை செல்வதற்காக பேருந்திலிருந்து இறங்கிய மருமகள் நிஷாந்தன் யாழினி (வயது 34) தொடர்பான எவ்வித தகவலும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும் மாமனார் கவலையோடு தகவல் தெரிவித்தார்.

இந்த நிலையில் இவ் விடயம் தொடர்பாக ஓமந்தை, கனகராயன்குளம், மடு, ஆகிய பொலிஸ் நிலையப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-15)

# ஒன்றரை இலட்சம்...

மன்னார் ஆகிய மாவட்டங்களிலேயே, கடுமையான வரட்சி நிலவுகின்றது.

திருகோணமலையில் 440 குடும்பங்களைச் சேர்ந்த 1,381 பேரும் கண்டியில் 679 குடும்பங்களைச் சேர்ந்த 2,510 பேரும் கம்பஹாவில் 2,107 குடும்பங்களைச் சேர்ந்த 8,647 பேரும் அம்பாந்தோட்டையில் 3,578 குடும்பங்களைச் சேர்ந்த 14,334 பேரும் மொனராகலையில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 820 பேரும் பதுளையில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 175 பேரும் அநுராதபுரத்தில் 412 குடும்பங்களைச் சேர்ந்த 1,505 பேரும் யாழ்ப்பாணத்தில் 24,324 குடும்பங்களைச் சேர்ந்த 85,461 பேரும் மன்னாரில் 10,235 குடும்பங்களைச் சேர்ந்த 34,765 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த நிலையம் அறிவித்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவுகின்ற வரட்சியான நிலைமையில், எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பின்னர் மாற்றங்களை எதிர்பார்க்கலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

20ஆம் திகதிக்கு பின்னர், நாட்டில் ஆங்காங்கே, அவ்வப்போது மழையை எதிர்பார்க்கலாம் என்றும் அத்திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, நுவரெலியாவில் தொடர் பனி பொழியும் என்றும் அத்திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (இ-3)

# வரட்சி நிவாரணப்...

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து நாட்டில் நிலவும் வரட்சி நிலை குறித்தும் அதற்கான நிவாரண ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடினர்.

வரட்சி நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக செயலணியொன்றை அமைத்தமை தொடர்பாக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த ஐ.நா உயரதிகாரிகள், இந்த அனர்த்த நிலை குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.

முதல் நடவடிக்கையாக வரட்சி நிலை தொடர்பான தொடர்பாடல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிபுணர்களை வழங்கமுடியும் என ஐ.நா பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வரட்சி காரணமாக தொழில்களை இழந்த கிராமிய மக்களுக்கு தொழில்களை பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உணவு அல்லது பணத்தை தமது நிறுவனத்தினால் வழங்க முடியும் என உலக உணவுத் திட்ட பிரதிநிதி தெரிவித்தார். உணவு அல்லது பணம் வழங்கும் இந்நிகழ்ச்சித்திட்டம் பல மாவட்டங்களில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இது ஏழை மக்கள் தனிப்பட்ட கடன் வழங்குனர்களிடமிருந்து அதிக வட்டிக்கு கடன்களைப் பெறுகின்ற நிலையை தவிர்க்க உதவும் என்றும் அவர் தெரிவித்தார். இலகு கடன்களை வழங்கும் அரச முகவர் நிலையங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்ள மக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும்.

வரட்சியினால் ஏற்படக்கூடிய முக்கிய பிரச்சினை குடிநீர் பற்றாக்குறையாகும் என்றும் அது பல்வேறு நீண்ட கால சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் ஐ.நா அதிகாரிகள் தெரிவித்தனர். வரட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நீர் வழங்க போதுமானளவு பௌசர்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் வரட்சி நிலை குறித்து கரிசனை செலுத்திவரும் ஐ.நா அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி. நிலைமைகளை மேலும் கண்காணிப்பதற்காக ஒவ்வொரு வாரமும் நடைபெறும் செயலணியின் கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு அவர்களுக்கு அழைப்புவிடுத்தார்.(செ-11)

# விமலின் சகாவிடம்...

ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுகளுக்காகவே வீரகுமார திஸாநாயக்க விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச வாகனங்களை தனது கட்சி உறுப்பினர்களுக்கும் சகாக்களுக்கும் வழங்கிய குற்றத்திற்காக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளார்.

இந்த நிலையிலேயே நேற்று அவரது கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான வீரகுமார திஸாநாயக்க பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரின் அழைப்பின் பேரில், நேற்று காலை அந்த அலுவலகத்திற்கு சென்ற வீரகுமார திஸாநாயக்க, தொடர்ந்து பல ம்ணி நேரங்களாக வீசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# கூட்டமைப்பு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து அதிகார பகிர்வினை பெற வேண்டிய தேவை இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மட்டக்களப்பு வருகை தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் தலைமையில் இடம்பெற்றது.

காத்தான்குடி நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் முதலமைச்சரின் செயலாளர் யூ எல் ஏ அசீஸ் உட்பட பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கிழக்கு மாகாண முதலமைச்சர் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இணைந்து செயற்படுவதன் ஊடாகவே இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணமுடியும என குறிப்பிட்டார்.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதியிடம் இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணுமாறு வலியுறுத்தவுள்ளதாகவும் கிழக்கு முதலமைச்சர் குறிப்பிட்டார். (செ-11)

# இளைஞனை கடத்திய...

கப்பம் கோரப்பட்டு, காணாமற்போகச் செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், இலங்கை கடற்படை அதிகாரியான, லெப்.கொமாண்டர் அனில் தம்மிகவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று கைது செய்தனர்.

இவரைக் கைது செய்வதற்கு, இலங்கை கடற்படையின் கடுமையான எதிர்ப்பை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்திக்க நேரிட்டது.

கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரியை கொழும்பு நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வான் ஒன்றுடன் கடத்தப்பட்ட இளைஞன், வெலிசறை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணாமற்போகச் செய்யப்பட்டிருந்தார்.

இளைஞனின் வான், பாகம் பாகமாக பிரித்து, விற்பனை செய்யப்பட்டதாக விசாரணையில் கண்டறியப்பட்டது.

அவ்வாறு பிரிக்கப்பட்டு விற்கப்பட்ட வாகனத்தின் எஞ்சிய சில பகுதிகள், வெலிசறை கடற்படை முகாமில் இருந்து மீட்கப்பட்டன.

அதேவேளை கடத்தப்பட்ட தமிழ் இளைஞனின் குடும்பத்தினரிடம் இருந்தும், இந்த கடற்படை அதிகாரி கப்பம் பெற்றுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# லசந்த கொலை...

இந்த கொலை வழக்கின் தடயப்பொருளாக கைப்பற்றப்பட்ட சிம் அட்டை, புறக்கோட்டையிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்திருந்தது.

அத்தோடு ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் வாகனத்தில் காணப்பட்ட கைவிரல் அடையாளம், பகுப்பாய்வு களின் போது பெறப்பட்ட கைவிரல் அடையாளத்துடன் பொருந்தவில்லை எனவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிலரது கையெழுத்துக்களை ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான அனுமதியை வழங்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது உயிருக்கு ஆபத்து ஏற்படுமாயின், மிக் விமான கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான தகவல்களை வெளியிட்டமையே அதற்கு காரணமாக அமையும் என லசந்த விக்கிரமதுங்க தனது மகளிடம் தெரிவித்திருந்தாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தாக்கல் செய்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கருத்துக்களை வெளியிட வேண்டாம் என தெரிவிக்குமாறு கடத்தப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் சாரதிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய லசந்த விக்கிரமதுங்கவின் மகள் மற்றும் சாரதி ஆகியோரது வாக்கு மூலங்கள் பொருந்துவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கு மார்ச் மாதம் 20ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-11)

# விரைவில் பிரதமர்...

உறுப்பினர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்றைய தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புறக்கோட்டை மத்திய ரயில் நிலையத்திற்கு முன்பாக நெற்றியில் கறுப்பு பட்டிகளை அணிந்தவாறு முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிணைந்த எதிர்கட்சியின் பங்காளிக் கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீரகுமார திஸாநாயக்க, ஜயந்த சமரவீர மற்றும் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க பொலிஸ் நிதிமோசடிப் பிரிவு அதிகாரிகளை தமது இல்லத்திற்கு அழைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விமல் வீரவன்சவை மூன்று மாதங்களுக்கு சிறைவைக்குமாறு பணித்திருக்கிறார். அந்த உத்தரவே இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டில் சுயாதீன சட்டம் தற்போது அமுல்படுத்தப்படுவதில்லை. மாறாக ரணில் விக்கிரமசிங்கவின் சட்டமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. எனவே இந்த நாட்டிற்கு எதற்கு சட்டம் ரணிலின் அதிகாரத்திற்கு அஞ்சுபவர்கள் நாங்கள் அல்ல என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம். விமல் வீரவன்சவையும் உங்களது ஆளுகைக்கு கீழ்ப்படுத்த முடியாது. எனினும் இந்த நாட்டின் அதிகாரத்தை வீழ்த்தப்போகின்றோம். ரணில் விக்கிரமசிங்கவின் ரை. கோட் அனைத்தையும் கழற்றவைத்து, காற்சட்டையை அணிவிக்கப் போகின்றோம். மத்திய வங்கியின் கொள்ளை தொடர்பில் உங்கள் மீது குற்றச்சாட்டு காணப்படுகிறது. ஆகவே நீங்கள் எறிந்த இந்தப் பந்து உங்கள் பக்கமே திரும்பப்போகின்றது என வீரகுமார தெரிவித்தார். (செ-11)

# பொருத்து வீட்டு...

தேசிய நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிகழ்வு நேற்றைய தினம் 11.30 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லிணக்கம் என்பது வடக்கு கிழக்கு மக்களுக்கு மாத்திரமே என்றும், அவர்கள் தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் பலரால் கூறப்பட்டு வந்தது. எனினும நல்லிணக்கம் என்பது தெற்கில் இருந்தும், நாடு முழுவதுமிருந்தும் ஏற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

அவர் கூறியது போன்றே தற்போது செயலில் காட்டியுள்ளார். நாங்கள் தமிழர்கள் தான், எமக்கென்று தனித்துவமும் உண்டு. அதனை பேணுவதோடு இலங்கையர் என்ற மனப்பான்மையையும் நாம் வளர்த்து கொள்ள வேண்டும். மேற்கு நாடுகளில் உள்ள மக்கள் தமது நாட்டின் ஒட்டுமொத்த வெற்றிக்காகவும் ஒனறிணைந்து போராடியே பல வெற்றிகளை கண்டுள்ளனர். அதேபோன்று நமக்குள்ளும் பல மதங்கள், இனங்கள் காணப்பட்டாலும் நாட்டின் வெற்றிக்காக உழைக்க வேண்டும்.

எமது மக்களுக்கு பல துன்பங்கள் வந்திருந்தன. அதில் ஒன்று தமிழ் மக்களுக்கு சாபமாக அமைந்ததுதான் அண்மையில் கொண்டுவரப்பட்ட பொருத்து வீடு. அதனை தடுத்து நிறுத்துவதில் மீள்குடியேற்றம் மற்றும புனர்வாழ்வு அமைச்சின் முன்னாள் செயலாளரும் தேசிய நல்லிணக்க அமைச்சின் இந்நாள் செயலாளருமான சிவஞானசோதி மிகவும் துணிகரமாக செயற்பட்டிருந்தார். நான உட்பட எமது மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இந்த பொருத்து வீட்டை எதிர்த்திருந்தனர்.

இந்த எதிர்ப்புக்களை அடுத்து குறித்த பொருத்து வீட்டு திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இருந்தும் தற்போது அந்த வீட்டு திட்டம் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் எமது மக்களுக்கு எது விருப்பமோ அதனை வழங்குமாறே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். ஆகையால் பொருத்து வீடு தொடர்பில் நாம் அலட்டிகொள்ள தேவையில்லை என்றார் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

இதேவேளை குறித்த வீட்டு திட்டம் தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில் முதலாவதாக அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாக எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# பேக்கரி உற்பத்தி...

ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

மா, எண்ணெய் மற்றும் மாஜரீன் உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளமையால் பேக்கரி உற்பத்திகளின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பாணின் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை எனவும் என்.கே. ஜயவர்தன கூறியுள்ளார்.

வெங்காயம், கிழங்கு, மாஜரீன் ஆகிய பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதால் அதற்கான வரியும் அதிகம் அறவிடப்படுவதே இதற்கு காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
இலகுவாக எழுத, வாசிக்க, சரியான உச்சரிப்புடன் கதைக்க...
2006 முதல் இன்றுவரை 1197 மாணவர்கள்
இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 21.01.2017 மு.ப. 10.00 0779 789 456 021 221 7781
No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 23.01.2017 பி.ப. 3.30 021 320 2973
IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்.....
(அரிய குளத்துக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில்)








**கொட்டகை விற்பனைக்கு**

70அடி நீளமுடைய (பனை மரம், சீற்) மாணவர் இருக்கையுடன் கூடிய கொட்டகை விற்பனைக்கு உண்டு. தனியார் கல்வி நிலையங்களுக்கு பொருத்தமானது.

**077 353 8419** (7533)



**Job Opportunity**

பிரபல வியாபார நிலையத்திற்கு ஆங்கில அறிவுடைய A/L படித்த அலுவலக ஊழியர்கள், மற்றும் பெண் தட்டெழுத்தாளர்கள் தேவை.

இடம் : யாழ்ப்பாணம், பருத்தித்துறை, பகுதியல் வசிப்பவர்கள் மட்டும் விரும்பத் தக்கது.

தொடர்புகளுக்கு:076690151



**FREE HOME DELIVERY**

யாழ்.நகரம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு, நிறுவனங்களுக்கு 20 லீற்றர் குடிநீர் குறைந்த விலையில் வீட்டிற்கு கொண்டு வந்து தரப்படும்.

**T.P: 077 338 4838, 077 634 7258** (7534)



**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

100% SATISFACTION GUARANTEED

**070 330 5500**
**021 221 5656**

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம் (C-7257)

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்



**கனடாவில் உயர்கல்வி**

A/L சித்தியெய்தி விட்டீர்களா? குறைந்தளவு கட்டணத்துடன் கனடாவில் (வெளிநாட்டில்) படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற ஆசையா? இன்றே, இப்பொழுதே தெளிவாக திட்டமிடுங்கள் காலத்தினை, பணத்தினை விரையமாக்காது உடனடியாக எம்மை நாடுங்கள். எம்மிடம் வருபவருக்கு பிரத்தியேகமான தனித்துவமான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.



சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி, குடியேற்ற ஆலோசகர்கள்

V4 EDUCATIONAL CONSULTANCY

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)

**0768226236**



**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


# மரண அறிவித்தல்



## இராசதுரை இராசேந்திரம்
## (பெரியண்ணா)

நாவற்காடு, அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை இராசேந்திரம் நேற்று (16.01.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - இராசமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற குணராசா - துரையம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சர்வகுணேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், இராசவர உதயம் (மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), சகுந்தலா, காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் சசிகலா (மருந்தாளர் - நொதேண் சென்றல் மருத்துவமனை - திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2017) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் உடலம் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலம்பதி வீதி,
நாவற்காடு, அச்சுவேலி.

தகவல் : த.இரத்தினசிங்கம்
(மெக்கானிக் சித்தப்பா)

(C-7267)


**மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்**
**வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா**



| JOB CATEGORY | QUT | SALARY (RM) |
|---|---|---|
| உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200 + OT |
| உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200 + OT |
| தையல் இயந்திர திருந்துநர் | 10 | 1800 - 2500 |

**மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர், தையல் இயந்திர திருத்துநர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.**

**நிபந்தனைகள்**

- இலவச தங்குமிட வசதி 3 வருடங்கள்.
- வேலை நேரம் 08 மணித்தியாலயங்கள் மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை.
- வயது 18 - 35
- அரசாங்க அனுமதிக் கட்டணம் ரூபாய் 50,000
- வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.

(C-7251)

**பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம், புகைப்படம், கடவுச்சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கவும்**

**இடம் : சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.** (யாழ்.ஆஸ்பத்திரி பின் வீதி)

**காலம் : 22.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி**

முற்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணத்தில் - 077 972 9481, 076 718 3799
கொழும்பு - 011 524 4146

**Capital Recruitment International (Pvt) Ltd**
No.130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo 14
அரச அனுமதி இலக்கம் LL No.: 2248


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.